பக்கங்கள் : பன்னிரெண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 15 புதன்கிழமை (31.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :278

# சுடர்ஒளி மீதான தாக்குதல்; ஜே.வி.பியினரே பொறுப்பு!

## தமிழ் எம்.பிக்கள் ஒரே குரலில் நாடாளுமன்றத்தில் கண்டனம்

கொழும்பு, ஓக.31

**'சுடர்ஒளி' பத்திரிகை நிறுவனத்தின்மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு நாடாளுமன்றத்தில் நேற்றுக் கடும்கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தமிழ் எம்.பிக்கள் அனைவரும் ஒரேகுரலில் கண்டனம் தெரிவித்தனர். இந்தத் தாக்குதல்களுக்கு ஜே.வி.பியே காரணமாக இருந்தது என்று அவர்கள் சாடினர்.**

'சுடர்ஒளி' பத்திரிகை நிறுவனத்தின் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்துவது திட்டமிட்ட ஒருசதிச்செயல் என்றும் சாடினார் ஐ.தே.க. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தியாகராஜா மகேஸ்வரன்.

''இன்னும் எத்தனை குண்டுகளை வீசினாலும் அப்பத்திரிகையின் வளர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. இந்த சுதந்திர ஊடகத்தின் மீது தாக்குதல்களை நடத்தும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு கிரனேட்களை பயன்படுத்தியே தாக்குதல்!

கொழும்பு, ஓக. 31

'சுடர் ஒளி' தலைமை அலுவலகம் மீதான தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு கைக்குண்டுகளும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சக்திவாய்ந்த குண்டுகளென கிராண்ட்பாஸ் பொலீஸார் நேற்றுக் கொழும்பு மேலதிக நீதிவான் சுஜீவ நிஸங்கவிடம் வழங்கிய அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் கிராண்ட்பாஸ் பொலீ (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த ஊழியரின் இறுதிக்கிரியை நாளை

கொழும்பு, ஓக. 31

நேற்றுமுன்தினம் மாலை 'சுடர் ஒளி' தலைமை அலுவலகம் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் உயிரிழந்த எமது நிறுவனத்தின் ஊழியரான டேவிட் செல்வரத்தினத்தின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை அவரது மட்டக்குளி இல்லத்தில் நடைபெறவுள்ளன.

தாக்குதலில் படுகாயமடைந்த அவர் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சை பயனின்றி அனுமதிக்கப்பட்ட அரை மணி நேரத்தில் அவர் உயிரிழந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

52 வயதான செல்வரத்தினத்தின் பூதவுடல் நேற்று வைத்தியசாலையில் இருந்து மருதானை றுகுணு மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தற்போது அங்கு வைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் தாக்குதல் குறித்து 20 பேரிடம் விசாரணை!

கொழும்பு, ஓக.31

'சுடர்ஒளி' தலைமை அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாகத் தொடர்ந்தும் தீவிர விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர நேற்றுத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் கிராண்ட்பாஸ் பொலீஸார் இதுவரை 20இற்கும் மேற்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறையைக் கண்டித்து நகரில் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.31

ஊடகங்கள் மற்றும் ஊடக வியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை யாழ். நகரில் அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.

இப்போராட்டத்திற்கு அழைப்பு விடுத்து அச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையில் தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்துவருகின்றன.

நிமலராஜன், நடேசன், சிவராம் என ஒருபுறம் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுகின்ற வேளை மறுபுறம் ஊடகவியலாளர்கள் கைதுகளும் ஊடக நிறுவனங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்கத் தயார் என சீனா அறிவிப்பு

கொழும்பு, ஓக.31

இலங்கைக்குத் தேவையான முழுமையான இராணுவ உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகச் சீனா அறிவித்துள்ளது. அந்த நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று சீனப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்துப் பேசினார். அப்போதே இந்த உதவி குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை-சீனா இடையேயான இராணுவ ஒப்பந்தம் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சீனப் பாதுகாப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கித் தாக்குதலில் புலி உறுப்பினர் பலி!

### மட்டக்களப்பில் சம்பவம்; மேலும் மூவர் காயம்

கொழும்பு, ஓக. 31

மட்டக்களப்பு, கிரிமிச்சைப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு போராளி உட்பட மூவர் காயமடைந்தனர்.

டிராக்டர் ஒன்றில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர் ரேகன் என்று அழைக்கப்படும் போராளி என்று முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுவினரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாற்றுக் கருத்துகளுக்குப் பயங்கரவாதம் என்ற அடையாளம் குத்தவேண்டாம்!

### சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு,ஓக.31

ஒரு செய்திப்பத்திரிகை என்ற முறையில் 'சுடர் ஒளி' தற்போதைய இன பிணக்கு தொடர்பான தமிழ்த்தேசிய மட்டத்திலான கருத்துக்களையே வெளியிட்டுவருகின்றது. இதன்மூலம் கொழும்பு நகருக்குச் செய்தியின் பன்முகத்துவத்தை அது கொண்டுவந்துள்ளது. கடந்த சில மாதங்களாகச் சிங்களத் தேசிய வாதக் குழுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் 'சுடர் ஒளி' செயற்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டி வந்துள்ளன.

கடந்த 18ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பிரசாரச் செயலாளர் 'சுடர் ஒளி' பத்திரிகை ''புலி பயங்கரவாதிகளுடன்'' நெருங்கிய தொடர்பு வைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பங்களிப்புடன் கிராமிய விசேட படையணி

### விடுதலைப் புலிகள் உருவாக்கினர்

திருகோணமலை,ஓக.31

பொதுமக்கள் பங்களிப்புடன் 'கிராமிய விசேட படையணி' என்ற கட்டமைப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கியுள்ளனர்.

எல்லைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட எல்லைப்படை போன்று - மக்கள் அங்கம் வகிக்கும் - கிராமிய விசேட படையணியின் முதலாவது அணி நேற்றுப் பயிற்சியை முடித்து வெளியேறியது.

இதற்கான நிகழ்வு திருகோணமலை சேனையூர் மத்திய கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது. இதில் போர்ப் பயிற்சி நிறைவும் பரிசளிப்பும் நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதி சு.வசந்தன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் தேசியக் கொடியை திருகோணமலை மாவட்ட கட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' செய்தியாளர்கள் இருவர் கிரான்ட்பாஸில் தாக்கப்பட்டனர்

கொழும்பு, ஓக. 31

'சுடர்ஒளி' பத்திரிகையின் மூத்த செய்தியாளர்கள் இருவர் நேற்றிரவு இனந்தெரியாத சிலரால் தாக்கப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்டது.

பணிமுடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. செய்தியாளர்கள் இருவரும் பஸ்ஸில் ஏற முற்பட்டபோது தாக்கப்பட்டனர். கொழும்பு, கிரான்ட்பாஸ் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாகப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் மேலதிக விசாரணைகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளனர். (க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை நிவாரணப் பணிகள்; முன்னேற்றம் குறித்து ஆராய்வு

## மனோ தித்தவெலவும் பங்கேற்பு



நேற்றைய சந்திப்பின்போது....

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப் படும் மீள்கட்டுமானப் பணிகளின் முன்னேற் றம் தொடர்பாக நேற்று யாழ்.செயலகத்தில் விரி வாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாட லில் கொழும்பில் இருந்து வருகைதந்த, ஆழிப் பேரலை அனர்த்த மீள் கட்டுமாணச் செயலணி யின் தலைவர் மனோ தித்தவெல தலைமையி லான குழுவினர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் முதலில் அரச அதி பர் மீள்கட்டுமானப் பணி தொடர்பான அறிக்கை யைச் சமர்ப்பித்தார். அது தொடர்பான கலந் துரையாடலும் இடம்பெற்றது.

தொடர்ந்து, மேலும் செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயப்பட் டது. இதில் வீடமைப்பு, மீன்பிடித்துறை, விவ சாயம், கல்வி, சுகாதாரம், கூட்டுறவு, வீதிகள், தொழிற்சாலைகள், பொதுக் கட்டடங்கள், வாழ் வாதாரம், பொது மற்றும் தொடர்பாடல் போன்ற வற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங் கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அரச சார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட னர்.

பிற்பகல் 1.30 மணியளவில் மேற்படி குழு, இன்பருட்டி, திக்கம் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து நேரில் சென்று ஆராய்ந்தது.

குழுவுடன் மேலதிக அரச அதிபர் ஆ.சிவ சுவாமி, ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளுக் குப் பொறுப்பான மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.வரதீஸ்வரன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மாசிலாமணி, நில அளவைத் திணைக்கள யாழ்.மாவட்ட அதிகாரி சிவதாசன், கிராம சேவையாளர்கள், ஆழிப்பேரலை அனர்த்த செயலணியின் பணிப்பாளர் பாலையா மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள் ஆகியோரும் பிரதேசங் களைப் பார்வையிட்டனர்.

(3-173-202-204)

## இராமகிருஷ்ண மிஷனின் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.31

இராமகிருஷ்ண மிஷன் வெளியீடு களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனை யும் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர் வரும் 4 ஆம் திகதிவரை பிற்பகல் 4.30 மணிதொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லூர் முருகன் ஆலய வடக்கு வீதியில் இடம்பெறவுள்ளன.

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச சிரமத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வு தேர், தீர்த்த உற்சவங்களின்போது காலை, மாலை இரு நேரமும் நடைபெறும்.

(3-202)

## விபத்தில் காயம்!

யாழ்.பிறவுண் வீதிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சுண்டுக்குளி, கச்சேரியடியைச் சேர்ந்த சுப்பையா சிவானந்தன் (வயது 55) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(ஓ-12)

# வீரச்சாவடைந்த 9 போராளிகள்

கிளிநொச்சி,ஓக.31

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் சாவடைந்த ஒன்பது போரா ளிகளின் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

ஓமந்தைப் பகுதியில் 1-8-97இல் 'ஜெய சிக்குறு' இராணுவ நடவடிக்கைப் படையின ரின் முகாம் மீது நடந்த தாக்குதலில் கேசகப் பிரியன் (தர்மபாலன் அருமத்துரை - அம்பி லாந்துறை, களுவாஞ்சிக்குடி) என்பவரும்- அரி யாலையில் சூரியக்கதிர் நடவடிக்கைக்கு எதி ரான தாக்குதலில் விழுப்புண் அடைந்து 17-10-97 இல் நிதிகரன் (யானகப்பேடி தங் கத்துரை - அம்பிலாந்துறை, மட்டக்களப்பு) என்பவரும் -

வாழைச்சேனை, காயிதாளை என்னும் இடத்தில் நடவடிக்கைக்காகச் சென்றுகொண் டிருந்தபோது இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் குமரன் (பொன்னையா குமார் - சின்னையா-வாழைச்சேனை) என்பவரும் -

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் அகத் திலாகுளம் பகுதியில் 18-9-92இல் இராணு வத்தினருடனான மோதலில் புகாரி அல்லது சாண் டிலியன். (நாகராசா விஜயகுமார் - செங்கலடி மட்டக்களப்பு) என்பவரும் -

அகத்தியாக்குளம் பகுதியில் 1-6-91இல் இராணுவத்துடனான மோதலில் காளிதாஸ் (சின்னப்போடி யோகநாதன் - கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு) என்பவரும்-

அம்பாறை மாவட்டத்தில் கல்லிச்சை வட முனைப்பகுதியில் 06-2-92இல் இராணுவத் தினருடனான மோதலில் கப்டன் நிலாந்தன் (கந்தையா மகேஸ்வரன் - மன்னப்பிட்டி பொல னறுவை) என்பவரும் -

நவுண்டியன் மடு என்னும் இடத்தில் 12-5-92இல் நீரில் மூழ்கி வித்தியானந்தன் - (காளிப்போடி வித்தியானந்தன் - எருவில், களுவாஞ்சிக்குடி) என்பவரும் -

கும்புறுமூலையில் 12-6-90இல் இராணுவ முகாம் மீதான தாக்குதலில் அந்தோனி அல் லது ஜெயகரன் (சின்னத்தம்பி குணராசா - மன்னப்பிட்டி, மட்டக்களப்பு) என்பவரும் - அம்பாறை நகர்ப் பகுதியில் புலனாய்வு நட வடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது 16-8-90 இல் ராஜா (ஜெகானந்தகணேஷ் சந்திரகுமார் - கல்லடி, மட்டக்களப்பு) என்பவரும் - வீரச் சாவடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஓ-3)

# ஆழிப்பேரலை நிவாரணத் திட்டத்துக்கு 2 ஆயிரம் கோடி தேவை என மதிப்பீடு

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நீண்ட காலத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வ தற்கு 2 ஆயிரத்து 83 கோடியே 52 லட்சத்து 30 ஆயிரம் ரூபா தேவை என மதிப்பிடப்பட் டுள்ளது. யாழ்.செயலகத்தின் புள்ளிவிவர அறிக் கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி ஒவ்வொரு திட் டங்களுக்குத் தேவையான நிதி வருமாறு:

* மீள்குடியேற்றம் - 17 கோடியே 10 லட்சம் ரூபா
* குடிதண்ணீர் மற்றும் சுகாதாரம் - 8 கோடியே 50 லட்சம் ரூபா
* நீர்ப்பாசனம் - 45 கோடி ரூபா
* கல்வி -53 கோடியே 60 லட்சம் ரூபா
* உடல்நலம் மற்றும் சமூக உளவியல் - 5 கோடியே 30 லட்சம் ரூபா.
* மீன்பிடித்துறை -676 கோடியே 77 லட்சத்து 80 ஆயிரம் ரூபா
* சக்தி மற்றும் தொடர்பாடல் - 389 கோடியே 23 லட்சத்து 60 ஆயிரம்
* வீதி - 260 கோடியே 45 லட்சம் ரூபா
* விவசாயம் - 29 கோடியே 80 லட்சம் ரூபா
* வீடமைப்பு - 110 கோடி ரூபா
* கூட்டுறவு - 5 கோடியே 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபா.
* தொழிற்சாலை - 5கோடியே 39 லட்சத்து 3 ஆயிரம் ரூபா.
* பொது மற்றும் சமயக் கட்டடங்கள் 19 கோடியே 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
* வாழ்வாதாரம் -69 கோடியே 30 லட்சம் ரூபா.
* உள்கட்டமைப்புக் கட்டடங்கள் - 288 கோடியே 50 லட்சம் ரூபா.

(3-202-204)

# புவியியல் தகவல்களைச் சேகரிக்க யாழ்.செயலகத்தில் தனிப் பிரிவு

யாழ்.குடாநாட்டுப் புவியியல் ரீதியான தகவல்களைச் சேகரிக்கப் புதிய பிரிவு ஒன்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரிவு யாழ்.மாவட்ட அரச அதி பர் கே.கணேஷின் ஒருங்கமைப்பின் கீழ் ஜீ.ரி.சற். நிறுவன அனுசரணையுடன் செயற் படவுள்ளது.

புவியியல் அமைப்புத் தொடர்பான தக வல்களை இலத்திரனியல் முறையில் தரவு களாக்கப்பட்டுத் தேவையான நேரத்தில் உட னடியாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் பாதுகாக்கப்படும்.

இதன்மூலம் பிரதேச ரீதியான அபிவிருத்தி மேற்கொள்ளும்போது சிக்கலான பரப்பு களைப் பகுப்பாய்வு செய்து முடிவுகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தை முதற்கட்டமாக யாழ். செயலகத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக எட்டு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன் றுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் யாழ்.மாவட்டத் திட்டமிடல் செயலகத்திலி ருந்தும் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந் தும் தெரிவுசெய்யப்படும் பிரதேசத் திட்ட அலுவலர்களுக்குப் புதிய தொழில்நுட்பம் மூலம் புவியியல்சார் தகவல்களைப் பெற் றுக் கொள்ளல் தொடர்பான பயிற்சிகள் வழங் கப்படும். இதன்மூலம் ஒருங்கமைக்கப்பட்ட செயற் றிட்டத்தின் கீழ் வலைப்பின்னலூடாக மக்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடி யும் எனவும் தெரிவிக்கப்பட்டது . (3-204-202)

# மணற்காட்டு கடற்றொழிலாளரை தெற்கு மீனவரே காப்பாற்றினராம்

கரவெட்டி,ஓக.31

திருகோணமலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள மணற்காட்டு கடற்றொழிலாளர்களை முன்னதாகத் தென்பகுதி மீனவர்களே காப்பாற் றிக் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி மணற்காட்டைச் சேர்ந்த மைக்கல்பிள்ளை வின்ரனிதாஸ், இரா சையா ரூபன் ஆகிய இரு மீனவர்களும் கடற் றொழிலுக்குச் சென்றபோது காணாமற்போயி ருந்தனர்.

இவர்கள் திரியாய் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின் னர் பொலீஸார் ஊடாகத் திருமலை நீதிமன்றத் தில் ஆஜர் செய்யப்பட்டனர். தற்போது அவர் கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்களது குடும்பத்தின ரும் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் இ.நேசரட்ண மும் அவர்களைச் சந்தித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி கடலுக்குச் சென்ற போது இயந்திரக் கோளாறு காரணமாகத் தமது படகு திசைமாறி சுமார் 50 மைல் தொலை விற்கு சென்றதாகவும் - அப்பகுதியில் றோலர் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தென்பகுதி மீனவர்கள் தம்மைக் காப்பாற்றித் தமது பட கைக் கட்டியிழுத்துச்சென்று பின்னர் கடற் படை யினரிடம் ஒப்படைத்தனர் என்றும்-

மணற்காட்டு மீனவர்கள் இருவரும் இச்சந் திப்பின்போது தெரிவித்தனர் என்று இ.நேசரட் ணம் கூறியுள்ளார்.

(ஓ-70)

# தேசிய எழுச்சி நிகழ்வு வாகனத் தரிப்பிட விவரம்

நாளை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்விற்கு மக்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் தரிப்பிட விவரங்களை கிளிநொச்சி எழுச்சிப் பேரவை யினர் அறிவித்துள்ளனர்.

மக்களை ஏற்றிவருகின்ற பேருந்துகள், உழவு இயந்திரங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் போன்றவற்றிற்கான தரிப்பிடங் கள் பிரதேச ரீதியாக வருமாறு:-

* அக்கராயன் பிரதேசம் - கரைச்சிப் பிர தேச செயலக சுற்றாடல்.
* முழங்காவில் பிரதேசம் - கனகபுரம் மைதா னம் (R.D.S.அருகில்).
* பூநகரிப் பிரதேசம் - சென்.திரேசா பெண் கள் கல்லூரி மைதானம்.
* பளைப் பிரதேசம் - கிளிநொச்சி - உருத் திரபுரம் வீதி.
* விசுவமடுப் பிரதேசம் - கரடிப்போக்கு - பன்னக்கண்டி வீதி.
* வட்டக்கச்சிப் பிரதேசம் - கிளிநொச்சி ம.வித்தியாலயம் - வட்டக்கச்சி வீதி.
* பரந்தன் பிரதேசம் - கந்தசாமி ஆலயம் - கணேசபுரம் வீதி.
* கிளிநொச்சிப் பிரதேசம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானம்,
* வடமராட்சி கிழக்கு- கணேசபுரம் வீதி, உருத்திரபுரம் - திருநகர் வீதி.

அத்துடன், துவிச்சக்கரவண்டித் தரிப்பி டங்கள் வருமாறு:- பண்பாட்டு மண்டபம், கரைச் சிப் பிரதேசசபை வளாகம், கிளிநொச்சி ம. வித்தியாலய மைதானம், திரேசம்மா ஆலய வளாகம், முருகன் ஆலய வளாகம். (3-12)


## இலவச தபால்மூல பாடநெறி

விபரங்களை அறிந்து கொள்ள உங்கள் முகவரியுடன் ரூ 5 முத்திரை ஒட்டப்பட்ட மேலதிக நீள கடித உறையை வைத்து அனுப்பவும். இவ்வாறு கடிதம் அனுப்பும் அனைவருக்கும் தெரிவு செய்த கற்கைநெறிக்குரிய முதல் பாடத்தொகுதி இலவசமாக அனுப்பிவைக்கப்படும். மார்க்கோனி நிறுவனத்தின் தபால்மூல கற்கைகள் நகர்த்தப்படும் தனித்துவ மையை அறிந்தபின் ஆர்வம் இருப்பின் கட்டணங்களைச் செலுத்தி இணைந்து கொள்ள முடியும். வயது வேறுபாடின்றி இலங்கையிலுள்ள அனைவரும் இணையலாம். கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

1.Dip in Electronics (1000+1000+500)
2.Dip in Cellular (1000+400)
3.Kid's Electronics (600)
4.Home Elecronics & Cellular (600)

MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112 361362




*யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளத்தில் வசித்து வரும் 50 முஸ்லிம் குடும்பங்களை சொந்த இடமான யாழ்.பொம்மை வெளிப் பகுதியில் மீளக் குடியமர்த்து வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கு நேற்று யாழ்ப் பாணம் வருகைதந்தன.*

*இக்குடும்பங்களைச் சேர்ந்த வர்கள் யாழ்.பிரதேச செயலக அதி காரிகளுடன் தமது காணிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கை யில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். இதற்கான ஏற்பாட்டை மக்கள் பணிமனையினர் மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (படங்கள்: பிரபா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அப்பட்டமான கோழைத்தனம்

தலைநகர் கொழும்பில் 'சுடர் ஒளி'யின் தலைமைப் பணிமனை மீது நடத்தப்பட்டிருக்கும் கொடூரத் தாக்குதல் 'உதயன் - சுடர்ஒளி' குடும்பத்தினரை மாத்திரமன்றி இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களையும் தமிழ் ஊடக சமூகத்தினரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது.

கொழும்பில் 'சுடர் ஒளி' பத்திரிகைப் பணிமனை மீதும் அதன் பத்திரிகையாளர்களை இலக்குவைத்தும் கடந்த பத்து நாள்களுக்குள் நடத்தப்பட்டிருக்கும் மூன்றாவது தாக்குதல் இது.

வெள்ளவத்தையில் அமைந்திருந்த 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை கடந்த 20ஆம் திகதி கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியது. அந்தச் சம்பவம் நடைபெற்று மூன்று தினங்களில் 'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் ஒருவரை ஜே.வி.பியினர் அடித்து உதைத்துத் தாக்கினர். கடமை செய்யவிடாது அவரைத் தடுத்ததுடன் அவரை 'ஒரு புலி' என்று கூறி பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

மூன்றாவது சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை - 'சுடர் ஒளி' பத்திரிகைத் தலைமைப் பணிமனை பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த வேலை நேரத்தில் - நடந்திருக்கிறது. 'கிரனேட்' குண்டுகள் கொண்டு நடத்தப்பட்ட கொடூரமான ஒரு தாக்குதலில் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்திருக்கிறார். பத்திரிகை நிறுவன ஊழியர்கள் இருவருக்கும் எழுத்தாளர் ஒருவருக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வாகனங்கள் உட்பட உடைமைகளும் சேதமடைந்திருக்கின்றன.

இந்த நாட்டில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் தமிழ் ஊடக நிறுவனங்கள் மீதும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களின் வரிசையில் கடைசியாக இடம் பெற்றிருக்கும் மிலேச்சத்தனமான - கோழைத்தனமான - சம்பவம் 'சுடர் ஒளி' பணிமனை மீதான இந்தத் தாக்குதல் ஆகும்.

'சுடர் ஒளி' பத்திரிகை தலைநகரில் ஸ்தாபிக்கப்பட்ட நாள் முதல் தமிழ்த் தேசியத்துக்கும் தமிழ்மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளுக்கும் ஆதரவாக - அவற்றுக்குப் பக்கபலமாக - நின்று வலுவாகக் குரல் எழுப்பிவருகின்றது.

'சுடர் ஒளி'யின் சகோதரப் பத்திரிகையான 'உதயன்' குடாநாட்டில் போர் நெருக்குவாரங்களின் மத்தியில் செயற்பட்டுக்கொண்டு எவ்வாறு தமிழ் இனம் மீது பேரினவாதம் புரியும் மனிதாபிமானமற்ற கொடூர ஒடுக்குமுறையையும் அரக்கத்தனமான - மிலேச்சத்தனமான - வெறித்தனமான - இராணுவ கொடூரங்களையும் உலகிற்குப் பகிரங்கப்படுத்தி வந்தானோ அதே வழியில் - அதே செல்நெறியில் - தலைநகரில் தமிழ்த் தேசியத்தின் குரலைப் பறைசாற்றி வருவது 'சுடர் ஒளி'.

என்றும் இருந்திராத அளவுக்குத் தமிழ்த்தேசியம் சர்வதேசமயப்படுத்தப்பட்டிருக்கும் இன்றைய சூழலில் - ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம், சர்வதேச சக்திகளின் சாந்தமான வழிமுறைகளுடான அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்கும் ஓர் ஆபத்தான - நெருக்கடியான - காலகட்டத்தில் -

காலத்தின் கட்டாயம் கருதி தமிழர் தம் பேரெழுச்சியையும் நியாயத்தோடு நீதி கேட்கும் தமிழர் தலைமையின் உரிமைக் குரலையும் உலகெங்கும் முழங்கிவருகின்றது 'சுடர் ஒளி'.

தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளின் திரை மறைவுத் தளமாக மாறியிருக்கும் சிங்கள தேசத்தின் தலைநகரில் இருந்துகொண்டு 'சுடர் ஒளி' இந்த வரலாற்றுக் கடமையை - பங்களிப்பை - தான் வரித்துக்கொண்ட வழியின்பால் நீதியுடனும் நேர்மையுடனும் முன்னெடுத்துவருகின்றது என்பதை அதன் வாசகர்கள் நன்கு அறிவர்.

ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள், இந்தியப் படைகளின் தாக்குதல்கள், நெருக்குதல்கள், மிரட்டல்கள், விமானப்படையின் நேரடியான வான்வழிக் குண்டுவீச்சு, கைக்குண்டுத் தாக்குதல்கள், கல்லெறிகள், இடப்பெயர்வுகள் பத்திரிகைப் பணிமனை 'சீல்' வைப்பு என்று யாழ். மண்ணில் மக்களோடு மக்களாக நின்று மக்கள் பணிபுரியும் 'உதயன்' சந்தித்த நெருக்கடிகள் ஏராளம். அது போலவே சிங்கள தேசத்தின் அதிகார மையத்துக்கு அருகில் இருந்து கொண்டு 'சுடர் ஒளி' முன்னெடுக்கும் மக்கள் பணியும் பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பது வெளிப்படை.

எனினும் -

ஈழத்தமிழ் மக்களும், அவர்கள் தம் வழிகாட்டிகளும் 'சுடர் ஒளி'க்குப் பக்கபலமாகவும், ஆத்மபலமாகவும் நிற்கும் வரை -

'சுடர் ஒளி' வரித்துக்கொண்ட வழியின்பால் நியாயத்தோடு நிலவும் அறமும், அதன் வழி துணைநிற்கும் கடவுளின் அருளும் கிட்டும்வரை -

'சுடர் ஒளி' சளைக்காமல், இளைக்காமல் தன்னுடைய மக்கள் பணியை வீறுடன் முன்னெடுக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் திடமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

ஈழத்தமிழர்கள் இன்று வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் நிற்கிறார்கள். தமிழர் தாயகத்தில் அவர்களது எழுச்சியும், வீழ்ச்சியும், எதிர்காலமும் இன்றைய முடிவுகளில் - தீர்மானங்களில் - பிரதிபலிப்புகளில்தான் முற்றாகத் தாங்கி உள்ளன என்பது நாம் உணர்ந்த விடயம்.

இந்த விவகாரத்தில் தனக்குள்ள வரலாற்றுக் கடமையை - பங்களிப்பை -'உதயன்' - 'சுடர் ஒளி' குடும்பம் செவ்வனே நிறைவேற்றும் என்று இந்த வேளையில் உறுதி கூறுகின்றோம்.

# எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சூழலை உருவாக்க அணிதிரள்வோம்!

## எழுச்சிப் பிரகடன செயலணி அழைப்பு

வட்டக்கச்சி,ஓக.31

எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குவதற்காகக் கிளிநொச்சியில் நடைபெறும் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் அனைவரும் அணிதிரண்டு பங்கேற்போம்.

- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றது கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன செயலணி. இதுதொடர்பாக அந்தச் செயலணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள, பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகின்றது. இது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக வழியிலான எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்த நிலையில், தமிழர் தாயகத்தில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று எதிர்நோக்கும் அவலமானதும் ஆபத்தானதுமான நிலையைச் சர்வதேசத்தின் முன் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருவதற்காகத் தமிழ்த் தேசியத்தின் பிரகடன நிகழ்வில் உரிமைக்குரல் எழுப்ப அனைவரும் அணிதிரள்வோம்.

சிங்களப் பேரினவாதம் எமது மக்களின் குடியுரிமையையும் மொழியுரிமையையும் வேலைவாய்ப்புரிமையையும் பறித்தெடுத்தது. அத்தோடு, கல்வியில் தரப்படுத்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்,அவசரகாலச் சட்டம் என்பன மூலம் தமிழ்பேசும் மக்களின் மனித உரிமைகள் மறுக்கப்பட்டன.

எமது பாரம்பரிய வாழ்விடங்கள் சிங்களக் குடியேற்றங்களாக்கப்பட்டு, எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டது. எனவே, மறுக்கப்பட்ட எமது உரிமைகளுக்காக உரத்த குரல் எழுப்ப செப்ரெம்பர் 1இல் நாம் அனைவரும் அணிதிரண்டு எழுவோம்.

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 22.02.2002 இல் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. தொடர்ந்து ஆறு சுற்றுப்பேச்சுகள் நடைபெற்றன. ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் நடை முறைப் படுத்தப்படாமையாலும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவு தொடர்பில் ஸ்ரீலங்கா அரசு பேச முன்வராததாலும் பேச்சுகள் தொடர்ந்து நடைபெறுவது சாத்தியமற்றுப்போனது. கடந்த மூன்றரை ஆண்டுகால சமாதான சூழலில் தமிழ்பேசும் மக்களின் இயல்பு வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

இறுதியாக ஆழிப்பேரலைக்குப் பின்னரான பொதுக்கட்டமைப்பினைக் கூட மனிதாபிமான அடிப்படை[illegible]லும் நடைமுறைப்படுத்த விரும்பாத அரசு எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வினைத் தரும் என நாம் நம்புவது? சிங்களப் பேரினவாதம் தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் வழங்க முன்வரமாட்டாது என்ற உண்மை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, எமது தாயக நிலத்தை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும் என்றும் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டுமென்றும் மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்ற அடிப்படையில் எம்மையும் எமது போராட்டத்தையும் அங்கீகரிக்கவேண்டுமெனவும் சர்வதேச சமூகத்தைக் கோருவதற்காக 01.09.2005இல் கிளிநொச்சி பொது மைதானத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறும் தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் அனைவரும் கிளர்ந்தெழுந்து எமது உரிமைக்குரலை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-405)

# எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்க எழுவோம்!

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் அறைகூவல்

கிளிநொச்சி,ஓக.31

எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்க எழுந்து வாரீர்.

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்.

எதிர்வரும் முதலாம் திகதி வியாழக் கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசியத்தின் எழுச்சிப் பிரகடனத்துக்கு ஆதரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக, மேற்படி தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இன்று பயங்கரமாக சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகின்றது. இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து குடியுரிமைக்காகவும், மொழியுரிமைக்காகவும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்துத் தமிழினம் போராடிக் கொண்டே வந்துள்ளது.

50 வருடங்களாகப் பேசிப் பேசி ஏமாற்றம் அடைந்ததுதான் தமிழினம்.

எனவே, எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் பொருட்டும் எமது போராட்டத்தை அங்கீகரிக்கும் பொருட்டும் சர்வதேச சமூகத்தைக் கோருவதற்காக 2005.09.01ஆம் நாள் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டுத் திடலில் நடைபெறும் தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் கலந்துகொண்டு ஆணையெடுக்கக் கிளர்ந்தெழுந்து வருமாறு கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் கோருகின்றது.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான பொதுக்கட்டமைப்பினைக்கூட மனித நேயத்துடன் நடைமுறைப்படுத்த விளையாத அரசு, வடக்கிலும் - கிழக்கிலும் மேலும் எவ்வாறு சிங்களவர்களைக் குடியேற்றுவது, புத்த விகாரைகளையும், பள்ளிகளையும் எப்படித் திறப்பது, இலங்கையை பௌத்த சிங்கள நாடு என்று எவ்வாறு உலகம் அங்கீகரிக்கச் செய்வது என்பதைப் பற்றியே நாள் தோறும் சிந்திக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்மான ஆட்சியில் கட்டுப்பாட்டோடு நிலவிவரும் கடந்த இரண்டு தசாப்த கால தமிழீழத் தனியரசை அங்கீகரிக்கும்படியும் எமது உரிமைகளைப் பெற்றுத்தரும்படியும் சர்வதேசத்தைக் கோரி உரிமைக்குரல் எழுப்ப அணிதிரளுமாறு தமிழ்த் தாயின் பெயரால் வேண்டுகின்றோம் -

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத மின் பாவனையைத் தடுக்க பொலீஸாரின் உதவியுடன் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.குடாநாட்டில் திருட்டு மின்சாரத்தைத் தடுப்பதற்கு பொலீஸாரின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கூடிய விலைக்கு மின்சாரத்தைப் பெற்றுக் குறைந்த விலைக்குப் பொது மக்களுக்குத் தாம் வழங்கிவரும் இந்த நிலையில் சில பொதுமக்கள் இவ்வாறான இந்த அநாகரிக செயலில் ஈடுபடுவது வருத்தத்துக்குரியது எனவும் - எனவே, அதனைத் தடுப்பதற்குப் பொலீஸாரின் உதவியை நாடவேண்டியது தவிர்க்க முடியாதது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சிலர் ஆடம்பரமாக மின்சாரத்தைச் செலவுசெய்யும் அதேநேரம், தமக்கு அதிக தொகை மின்சாரக் கட்டணம் அறவிடப்படுவதாகப் புகார் தெரிவிக்கின்றனர் எனக் கூறினார்.

மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிப்பதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் எனவும் 90 அலகுக்கு மேல் பாவித்தால் மட்டுமே அதிக கட்டணம் செலுத்த நேரிடுகிறது எனவும் அந்த அதிகாரி சொன்னார்.

(த-12)

**உதயவாக்கு**

மனிதன் எந்தளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்தளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.
- சுவாமி விவேகானந்தர்.

**நாளை**

ஆவணி 16
வியாழக்கிழமை
01.09.2005
திதி: திரயோதசி
முன்னிரவு 09.03 வரை
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் 12.32 வரை
சுபநேரம்: 07.35 - 09.05
[illegible]
[illegible]

வலி.கிழக்குப் பிரதேசத்தில்—

# உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.31

வலி.கிழக்குப் பிரதேசசபை, உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது எனச் சபையின் செயலாளர் த.நடராசா தெரிவித்தார்.

நடைமுறைப்படுத்தவுள்ள செயற்பாடுகள் வருமாறு:-

- உள்ளூராட்சி வாரத்தில் சனசமூகங்களுக்குக் கீழுள்ள முன்பள்ளிகளுக்கிடையில் விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் என்பவற்றை நடத்தி பரிசில்கள் வழங்குதல் -
- சபையின் கீழுள்ள சகல பொதுக் கிணறுகளுக்கும் குளோரின் இடல், கட்டாக்காலி நாய்களை அழித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சந்தைகள், மயானங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சனசமூக நிலையங்களின் பங்களிப்புடன் சிரமதானம் செய்தல், பயன்தரு மரங்களைப் பொது இடங்களில் நடுதல்.
- உள்ளூராட்சி [illegible]களின் செயற்பாடுகள் தொடர்பா[illegible] துண்டுப் பிரசுரம், பதாதைகள் மூல[illegible] பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(3-202)

**தமிழினத்தின் எழுச்சியை செப்ரெம்பர் 1இல் உலகிற்கு உணர்த்துவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Frima Broiler குஞ்சுகள் 44/=. பேடுக் குஞ்சுகள் 05.09.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சுட்டிபாம் - வட்டுக் கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங் கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவ கச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - #19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39289)

தரமான நம்பர் -1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 31.08.05 மாலை விநியோகிக்கப்படும் பதிவு களை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - முதலாம் கட்டை பருத்தித்துறை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், றாதா - மாவடி வட்டுக் கோட்டை, P.ரவி - சாவகச்சேரி. T.P.No.: 222 2867, 222 3529. (39474)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, கணவனை இழந்த, அழகிய 30 வயது பட்டதாரி ஆசிரி யருக்கு மணமகன் தேவை. தாரமிழந்தவர் கள் முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல.2689, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39457)

## Walk in Interview

**Management Assistant (Male/Female)**

- Good skills in Team management
- Good Computer Literacy-especially (MS Word, Accounting Package)
- Fluent Spoken and written English And Tamil

**Date & Time:-01/09/2005 – 10.00A.M.**

**Cosy Restaurants**
**No 15, Sirambiyadi Lane,**
**Jaffna, TP No:- 021-2225899**

(C/44686)

## Organ/Violin Notes

சினிமாப் பாடல்களுக்கான இசைக் குறிப்புகள், கேள்விஞானம், keyboard exercise, மேற்கத்தேய இசைபற்றித் தெரிந்து கொள்வோம். ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு.

**சுரவீணா இசை மன்றம்,**
75, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
T.P.: 0713055991
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே).

(21.34.17) (39337)

## தவறிவிட்டது

கதிர்காமத்தம்பி செல்வபாலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.773644918V), வன்னி நிலையான அனுமதி அட்டை (இல. 121992நி), AAT IC காட் (இல.200582419) ஆகியவை முகமாலைக்கும் நல்லூருக்கும் இடை யில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**அம்பிகை நகை மாடம்**
நெல்லியடி.
T.P.: 077 7275331

(C/44860) (21.34.17)

# மனமுவந்து வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றித் தனது சிறந்த சேவை மனப்பான்மையுடன் திறமையும் காரணமாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராக உயர்வுபெற்ற

உயர்திரு.

## துரைசிங்கம் ரகு

அவர்கள் மேன்மேலும் பல பதவி உயர்வுபெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்: **P. ரவி**

**ரவி விற்பனை நிலையம்**
இல.11, சந்தை உட்புறம்,
சாவகச்சேரி. T.P.: 0776245134

(39471) (26.34.17)

**S.K. Sales சென்ரர்**
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
T.P.: 077 3256579

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங் கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## IIS CITY CAMPUS

**BSc IT / BBA**

மாணவர்களே !
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத் திருந்த சர்வதேசப் பல்கலைக்கழக மொன்றின் மேற்படி கற்கைநெறிகளை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். குடாநாட்டு மாணவர் களுக்கு வரப்பிர சாதமாக அமையவுள்ள இச்சந்தர்ப் பத்தின் மூலம் நீங்கள் பட்டதாரியாக வேண்டுமென்ற கனவினை நனவாக்கிக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களை
செப்ரெம்பர் 5ம் திகதி உதயன் பத்திரிகையில் எதிர்பாருங்கள்.

**Director**
**IIS CITY CAMPUS**
**# 181, Navalar Road, Jaffna.**
**T.P.No.: 021 222 8060, 021 222 2201**

## ஆசிரியர் தேவை

**மல்லாகத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு தரம் 6-11 வரை தமிழ், சமூகவியல் பாடங் களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.**

**தொடர்பு: 0779217992**

(39417) (21.1734)

# என்றென்றும் வாழ்த்துக்கள்



## ஹெரால்பேட் – விழிநிஷானி

உற்றாரும் வாழ்த்த
உறவுகளும் பூத்துவ
நல்லறமாம்
இல்லறத்தில்
இணையும் தம்பதியே
பல்லாண்டு காலம்
பார்போற்ற வாழ
பல கோடி
வாழ்த்துக்களை நாம்
கூறி நிற்கின்றோம்.

இன்று (31.08.2005) புதன்கிழமை நெடுந்தீவில் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும் **ஹெரால்பேட்** (கண்ணன்– ராசிக்கிக்) – **விழிநிஷானி** (நிஷானி) ஆசிரியை (B.A.Hons.) தம்பதிகளை சீருஞ்சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

கல்வளை வீதி, சண்டிலிப்பாய். (C/44861)(50)

வாழ்த்துவோர்: **செ. கவிதரன் – உமா**

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



அகவை அறுபது கண்ட பெரியார்

### உயர்திரு. முருகேசு அமுதலிங்கம்

(மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை-யாழ்.பிரதேசம்)

கோப்பாய் தந்த அமுதலிங்கம் பெரியோய்
சத்தியந் தவறாத சற்குணச் செம்மலே!
கடமையுணர்ச்சியதனால் காரியங்கள் பல படைத்தீர்
உயரிய பண்பதனால் உள்ளமதில் உறைந்திட்டீர்
அகவை அறுபது அடைந்திட்ட அன்பரே!
நீண்ட காலம் வாழ்ந்து நிலவுலக புகழுடனே
இன்பமொடு வாழ்கவென இறையருளை வேண்டுகின்றோம்
வாழ்த்துக்கள் கூறி வாயார வாழ்த்துகின்றோம்

**யாழ்.பிரதேச அலுவலகம்,**
**இலங்கை மின்சார சபை,**
**சுன்னாகம்.**

(39470)(21.17.34)

*உதவி மின்பொறியியலாளர்*
*மின் அத்தியட்சகர்,*
*உத்தியோகத்தர்கள்,*
*ஊழியர்கள்.*

# நெஞ்சம் மறவாத மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கிருஸ்ணபிள்ளை கணேசமூர்த்தி

(ஓடி கணேஸ்)
(வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி)

தோற்றம் 27-07-1944 | மறைவு 03-09-2002

அன்பான அப்பாவே!
நீங்கள் எமைப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறாதெம் துயரம்!
அன்பாலும் பண்பாலும் சீராட்டி
பாசமழை பொழிந்து நன்மக்களாக்கி
நானிலம் போற்ற நற்பண்புகளுடன்
வாழவைத்த
எங்கள் அருமை அப்பாவே...
ஊர் கொடிய துரோகிகள்
உங்களை மனங்கொண்டு அழித்தனரோ?
உங்களின் மதிமுகம் காணாது
வாடுகின்றோம் நாமிங்கே!

வைரவர் கோயிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(39472) (32-21-17-34)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# கன்னிமா கௌரி அம்பாள் ஆலய அபிராமி திருமண மண்டப

## திறப்பு விழா



நிகழும் மங்களகர மான பார்த்திப வருஷம் ஆவணி 15ஆம் நாள் (31.08.2005) புதன்கிழமை பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையில் முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரையுள்ள சுபவேளையில் **தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களால் திருமண மண்டபம் திறந்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குப்பிளான். (39473)(21.17.34)

**தம்பித்துரை செல்லம் குடும்பத்தினரும் ஆலய பரிபாலன சபையினரும்.**

### அதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை

இலங்கை அதிபர் சேவை தரம் I, தரம் 2-I தரம் 2-II, தரம் 3 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த அதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை ஒக்ரோபர் மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தாபன விதிக்கோவை, பாடசாலை நிதிநிர்வாகம், கல்வி நிர்வாகம்- மேற்பார்வை ஆகிய மூன்று பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

பல்தேர்வு வினாத்தாள்கள், கட்டமைக்கப்பட்ட வினாத்தாள்கள் ஆகிய இரண்டு பகுதிகளுக்கு ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

பரீட்சையில் திறமைச் சித்திபெற ஒவ்வொரு பாடத்திலும் நாற்பது சதவீதத்துக்கும் கூடுதலான புள்ளிகளைப் பெற வேண்டும்.

பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை பூர்த்தி செய்து திணைக்கள தலைவர்களூடாக செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல, கொழும்பு' என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-152)

### நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன

மீசாலை, அல்லாரை கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. ஏற்கனவே தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு லயன்ஸ் கழகத்தினால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 பொலீஸ் நிலையங்களுக்கு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு!

லங்காதீப

கொழும்பு,ஓக.31

யாழ். பிரதேசத்திலுள்ள பொலீஸ் நிலையங்களில் சேவையாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதால், அங்குள்ள பொலீஸ் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய, குடாநாட்டிலுள்ள 16 பொலீஸ் நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்க இராணுவக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று யாழ். பொலீஸ் நிலைய உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் யாழ். பொலீஸ் அதிகாரி சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலை தொடர்பாக விசேட பொலீஸ் குழுவொன்றினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள 4 விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான கோபாலன் வீரபாண்டியனை விடுவிக்குமாறும் அல்லாது விடின் அவருக்குப் பதிலாக பொலீஸ் அதிகாரியொருவர் கடத்திச் செல்லப்படுவாரெனவும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுத்துள்ள அச்சுறுத்தல்களையடுத்தே இந்தப் பாதுகாப்புச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று அந்தப் பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதேசத்தில் பணியாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் இராணுவப் பாதுகாப்பின்றி தனித்து நடமாடக்கூடாதெனவும், தனியொரு வாகனத்தில் மாத்திரம் எந்தவொரு இடத்துக்கும் பயணிக்கக் கூடாதெனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க, உயர் பொலீஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் இணைந்து மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு அமையவே இப் புதிய பாதுகாப்பு நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஐ-206)

## ஆனந்தசங்கரி லண்டனில் தலைமறைவு

லங்காதீப

கொழும்பு,ஓக.31

விடுதலைப் புலிகளால் விடுக்கப்படும் மரண அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதையடுத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வெளிநாடு சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதன் பின்னரே அவர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தற்போது ஆனந்தசங்கரி லண்டனில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவாறு கடுமையாக விமர்சித்திருந்த ஆனந்தசங்கரி, கொலைகள் இடம்பெறாத வகையில், போர்நிறுத்த உடன்பாடு மீளாய்வு செய்யப்படவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-206)

# 5ஆயிரம் சிறுவர்களைப் புலிகள் படைக்குத் திரட்டியுள்ளனராம்!

லக்பிம

கொழும்பு,ஓக.31

அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு ஐயாயிரத்து எண்பத்தியொரு (5081) சிறுவர் சிப்பாய்களைச் சேர்த்துக் கொண்டுள்ள தாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவியான பேராசிரியை திருமதி ஹிறந்தி விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பலவந்தமாகச் சேர்த்துக்கொள்




ளப்பட்டுள்ளவர்களுள் 2ஆயிரத்து தொளாயிரத்து 75பேர் சிறுவர்களெனவும், 2ஆயிரத்து 106பேர் சிறுமிகளெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இள வயதுப் போராளிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தே பெருமளவில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 2ஆயிரத்து 356 சிறுவர்களும் யாழ். மாவட்டத்திலிருந்து 749 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 471 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 412 பேரும், கிளிநொச்சியில் 232 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 212 பேரும், மன்னார் மாவட்டத்தில் 184 பேரும் இவ்வாறு பலவந்தமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்துள்ள காலங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு வசமுள்ள இள வயதுப் போராளிகளில் 33 சதவீதமானோர் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், இன்னமும் இளவயது போர்வீரர்கள் அந்த அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் பேராசிரியை ஹிறந்தி விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

அரசு மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்போடு பேச்சுகள் மேற்கொள்ள முன்வந்திருப்பதால், அந்தப் பேச்சு மேசையில் வைத்து சிறுவர்களைப் படைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவது, தடுக்கப்படுவது தொடர்பான நிபந்தனை ஒன்றை அரசுத் தரப்பினால் முன்வைக்க முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.। (ஐ-206)

# புதிய மின் கட்டணங்கள் ஒக்-1 முதல் நடைமுறைக்கு

லக்பிம

கொழும்பு,ஓக.31

இலங்கை மின்சார சபையால் அதிகரிக்கப்பட்டுள்ள நிரந்தர மின் கட்டணங்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் அறவிடப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை அச்சபை மேற்கொண்டுள்ளது.

இலங்கை மின்சார சபை, மின் கட்டண அறவீட்டுச் சிட்டை தொடர்பாக அறவிடும் நிரந்தரக் கட்டணத்தை 30 வீதத்தால் அதிகரித்து வர்த்தமாணி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த வர்த்தமானியில் மின் அலகு ஒன்று தொடர்பான கட்டண அதிகரிப்பு குறிப்பிடப்படாத காரணத்தால் பின்னர் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமாணி அறிவித்தலில் அதிகரிக்கப்பட்டுள்ள அந்த இரு கட்டணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டாவது வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக நுகர்வோர் மின்சார சபைக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்க, வழங்கபட்டிருந்த 30 நாள்கள் கொண்ட கால அவகாசம் செப்ரெம்பர் 2 ஆம் திகதியுடன் முடிவடைய இருப்பதால், அது தொடர்பான முறைப்பாடுகள் முன் வைக்கப்படாதுவிடில் , ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் கட்டண அதிகரிப்பு நடைமுறைப் படுத்தப்படுமென மின்சார சபையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். (ஐ-206)

# ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கிய முடிவுகள் 3ஆம் திகதி

திவயின

கொழும்பு, ஓக.31

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் யார் என்பது உட்பட முக்கிய முடிவுகளை அக்கட்சி எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி அறிவிக்கவுள்ளது.

விகாரமாதேவி பூங்காவில் இடம்பெறவுள்ள பிக்குமார் சம்மேளனத்தின் மாநாட்டில் இந்த அறிவிப்பு விடுக்கப்படும்.

நாடு பூராவுமுள்ள 1000 பௌத்த பன்சாலை களிலுமுள்ள பௌத்த பிக்குகள் மற்றும் பங்களிப்பாளர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

பரந்துபட்டுள்ள பௌத்த குருமாரின் பலத்தை ஒருமுகப்படுத்துவதும் நாட்டின் தார்மீகத் தலைமைத்துவத்தையும் ஒழுக்க சீலம்மிக்க சமுதாயம் ஒன்றையும் உருவாக்குவதை நோக்காகக் கொண்டே இம் மாநாடு ஒருங்கிணைக்கப்படுவதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கிராமத்தையும் பன்சாலையையும் ஒன்றோடொன்று பிணைக்கும் இந்த பௌத்த மாநாட்டின் அமைப்பாளர்களாக வண. அத்துரலியே ரத்ன தேரரும் மற்றும் கொட்டபொல அமரகித்தி தேரரும் செயற்பட்டு வருகின்றனர்.(ஐ-206)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக 5 கட்சிகளின் முடிவு இவ்வாரம்

லக்பிம

கொழும்பு,ஓக.31

இம்முறை இடம் பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சிகள் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் பற்றிய இறுதித் தீர்மானம் தீர்மானம் இந்த வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 5 அரசியல் கட்சிகளினதும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளே இவ்வாறு தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி. இவ்வாரத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் மேற்கொள்ளவிருக்கும் பேச்சுக்களின் பின்னர் தமது கட்சியின் நிலைப்பாடு பற்றித் தீர்மானிக்கவுள்ளது. அதுபோன்றே ஜாதிகஹெல உறுமயவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும், எதிரணித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்களை மேற்கொண்டதன் பின்னர், தமது கட்சியின் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இவ்வாரத்தில் கூடி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமது நிலைப்பாடு பற்றிய தீர்மானத்துக்கு வரவுள்ளதாக அக்கட்சிகளின் தலைமைகள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டச் சபை கடந்த 26ஆம் திகதியன்று இது தொடர்பான பேச்சுக்களை மேற்கொள்ளவிருந்ததாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், இவ்வார இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் பங்களிப்புப் பற்றிய இறுதித் தீர்மானம் வெளியிடப்படுமெனவும் அக்கட்சியின் செயலாளரான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.(ஐ-206)

## நாட்டில் 13 ஆயிரம் வெளிநாட்டுப் பயணிகள்

திவயின

கொழும்பு,ஓக.31

வெளிநாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகளாக இந்நாட்டுக்கு வந்துள்ள சுமார் 13ஆயிரம் பேர் வரையில் மீண்டும் அவர்களது நாடுகளுக்குச் செல்லாது இங்கு தங்கியிருப்பதாக அரசு மேற்கொண்டுள்ள விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன. உல்லாசப் பயண 'வீஸா' அனுமதி மூலம் இந்நாட்டுக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் முடிவுற்றதன் பின்னர் கட் டாயமாக இந்நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டுமென சட்டம், ஒழுங்கு மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.(ஐ-206)

# சிறைக் கைதிகளுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

திவயின

சிறைக் கைதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் நாளாந்தக் கொடுப்பனவை நான்கு ரூபாய்களால் அதிகரிக்க சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய சிறைக் கைதி ஒருவருக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் ஒரு ரூபாய்க்குப் பதிலாக அது ஐந்து ரூபாய்களாக இருக்கும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ரூமிக் மர்சூக் தெரிவித்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து வெளியேறிச் செல்லும் நலன்புரி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தின்போதே நீதியமைச்சர் ஜோன் அமரதுங்க இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பழைமையான சம்பிரதாயமுறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதையடுத்தே சிறைக் கைதிகளின் நாளாந்த வேதனம் இவ்வாறு ஐந்து ரூபாக்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறைக்கைதிகள் விடுதலை பெற்று வெளியேறும்போது நாளாந்த வேதனத்தொகை சம்பளமாக அவர்களிடம் கையளிக்கப்படும். (ஐ-206)

# நேரடிப் பேச்சு எங்கு நடக்கும்? இந்தவாரம் முடிவு தெரியவரும்

லக்பிம

கொழும்பு,ஓக.31

போர்நிறுத்த ஒப்பந்த நடைமுறை தொடர்பான அரசு - புலிகள் நேரடிப் பேச்சு எப்போது நடைபெறும் என்பது தொடர்பான அறிவித்தல் இவ்வாரம் வெளியிடப்படும். இந்தப் பேச்சுக்கள் நடைபெறவுள்ள இடம் தொடர்பாகஇணக்கப்பாடொன்றுகாண்பதற்குரிய நிலைப்பாடொன்று உருவாகியுள்ளதால், அதன் அடுத்த கட்டமாகப் பேச்சுக்களில் பங்கேற்கும் உறுப்பினர்கள் மற்றும் பேச்சுக்கான திகதியைத் தீர்மானிப்பது மாத்திரமே எஞ்சியுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய இது தொடர்பான தீர்மானங்கள் இந்த வாரத்தினுள் வெளியிடப்படுமெனவும் தெரியவந்துள்ளது. (ஐ-206)

# இம்முறை வாக்களிப்போர் தொகை 15 லட்சங்களால் அதிகரிப்பு

லங்காதீப

இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தயாராக இருக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை 1999ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இருந்ததை விடவும் சுமார் 15 லட்சங்களால் அதிகரித்துள்ளது.

1999ஆம் ஆண்டு டிசெம்பர் 27ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், 1998ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலுக்கு அமைய, வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த ஒரு கோடியே 17 லட்சத்து 79 ஆயிரத்து 200 பேர் பதிவு செய்யப்பட்டிருந்தனர் என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவுள்ளோர் தொடர்பாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை ஒரு கோடியே 33 லட்சத்து 27ஆயிரத்து 160 பேராகும்.

2004இல் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளோரின் பெயர்ப்பட்டியலே இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்படுமெனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, 1999ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் 84 லட்சத்து 35ஆயிரத்து 754பேர் வாக்களித்துள்ளனர் என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 30 லட்சத்து 33 ஆயிரத்து 966 ஆகும். (ஐ-206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வயல் பாடசாலை அருகே படையினரால் ஷெல் மீட்பு

தென்மராட்சி.ஓக.31

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்திற்கு அருகில் காணப்பட்ட ஷெல் படையினரால் கடந்த வியாழக்கிழமை எடுத்துச்செல்லப்பட்டது.

வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள காணியில் குழி தோண்டியபோது பாரிய ஷெல் காணப்பட்டது. இந்த ஷெல்லினை செயலிழக்கச்செய்ய வந்த வெடிபொருள் அகற்றும் நிறுவனத்தினர் ஷெல்லினைச் செயலிழக்கச் செய்யும் போது பாடசாலைக் கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்படலாமெனக் கூறி அதனை மீட்காமல் சென்றுவிட்டனர்.

இதனையடுத்து படையினரின் வெடிபொருள்கள் அகற்றும் பிரிவினர் கடந்த புதன்கிழமை அப்பகுதியில் பலத்த பாதுகாப்பினை ஏற்படுத்தி ஷெல்லினை மீட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)


## யாழ் .நகரில் இருந்து குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை (PARCEL SERVICE)

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்களைக் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டணவிவரம் விமானமூலமான

ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், பிராங்போட், இத்தாலி.) } 650/= 1kg

கனடா - 1050/=

குறிப்பு: எம் மூலமாக அனுப்பப்படும் பொருள்கள் அந்த அந்த நாட்டில் அவர்களது வீடுகளில் ஒப்படைக்கப்படும். வேறு எது விதமான மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு:

**RAIN BOW TRAVELS & TOURS**

T.P.: 0777328219, 021-222 3237.

32½, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்

அபிநயா நகை மாடத்திற்கு மேல்.

(சி-44045)


## நெஞ்சில் நீங்காத ஓராண்டு நினைவுடன்



அமரர் நாகமுத்து மார்க்கண்டு

தோற்றம் 13★08★1921 — மறைவு 11★09★2004

*நெஞ்சில் நிலைத்து நிற்கும் அணையாத தீபமே*
*ஓராண்டு சென்றாலும் உம் நினைவு எம் மனதில்*
*ஓராயிரம் ஆண்டு நிலைத்து நிற்கும் தெய்வமே*
*பார் போற்றும் அந்திரான் பதி அழகன் திருவடியில்*
*சிறுறவே நீர் என்றும் திருவடியில் இணைவீர் ஐயா.*

"ஸ்கந்தபுஷ்கரணி"
நவாலி கிழக்கு,
மானிப்பாய். (39446)(46-13-15)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி விஜயராணி சிவராசா

தோற்றம் ..★06★1956 — மறைவு 30★07★2005

*உயிருக்குயிராய் நேசித்து ஒற்றுமையாய் வாழ்ந்தீர்*
*ஒளிமயமான நம் வாழ்வு இருளாகிப் போச்சே!*
*என்றும் வாழ்வில் மகிழ்ச்சியையே எதிர்பார்த்தோம்*
*பேரிடியாய் வந்ததே உம்பிரிவு எமக்கு !*
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.*

30-07-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (31-08-2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெறும்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**சீ.சிவராசா** (கணவன்).
**சி.சிறீலக்ஸ்மன்** (மகன்).

இல.4, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி/44799)(46-13-15)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு!

ஊர்காவற்றுறை, ஓக.31

ஊர்காவற்றுறை பிரதேசசபை அதிகாரிகளும், காரைநகர் பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகரும் இணைந்து எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் காரைநகரில் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே, குறித்த தினங்களில் பொது மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் முதலாம் திகதி தோப்புக்காடு, களபூமி, டிப்போவடி, பாலாவோடை, ஊரி, வலந்தலை ஆகிய பகுதிகளிலும் -

இரண்டாம் திகதி வைத்தியசாலையடி, மாப்பாணவூரி இலகடி, அல்வின் வீதி, சிவகாமி அம்மன் கோவிலடி, விக்காவில் ஆலடி ஆகிய பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளன என ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கணேசானந்தராஜா தெரிவித்தார். (எ-16)

## மூன்றாம் கந்தாயத்துக்கான மருந்துகள் விநியோகம்

வலி.தென்மேற்கு, ஓக.31

யாழ்.சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு இவ்வருட மூன்றாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை குடாநாட்டிலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரச மத்திய மருந்தகங்கள் ஆகியனவற்றிக்கு விநியோகம் செய்துவருகின்றது.

இதன் பிரகாரம் கடந்த 23ஆம் திகதி அன்று தீவகப் பிரதேசத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு மருந்துவகைகள் வழங்கப்பட்டுள்ளன.

வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் புனரமைப்புப் பணிகள்

வலி.தென்மேற்கு, ஓக.31

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி, பெண்கள் விடுதி மற்றும் வைத்திய அதிகாரி வசிப்பிடம் ஆகியனவற்றைப் புனரமைப்புச் செய்துவருகின்றது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் புங்குடுதீவைச் சேர்ந்த நலன் விரும்பிகளின் நிதி உதவியுடன் இந்தப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதேவேளை, இவ்வைத்தியசாலையில் வாரத்தில் இரு தினங்கள் அதாவது செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல் வேளையில் மட்டுமே தற்போது வைத்திய சிகிச்சை நோயாளருக்கு வழங்கப்பட்டுவருகின்றது.

வேலணை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆ.திருநாவுக்கரசு இங்குசென்று வெளிநோயாளர்களுக்கு வைத்திய சிகிச்சையை மேற்கொண்டுவருகின்றார்.

இங்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்துத்தருமாறு மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-135)

## பொன்விழா நிகழ்வுகள்

கொழும்பு, ஓக.31

மரியாயின் சேனை யாழ்.கொமிற்சியத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

அன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் பொன்விழாத் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அகவொளி நிலைய மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள், பொன்விழா மலர் வெளியீடு என்பன இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் யாழ்.ஆயர், யாழ். மறை மாவட்டக் கொமிற்சிய அங்கத்தவர்கள் [illegible] என இயக்குநர் அருட்திரு. றெஜி இராஜேஸ்வீரன் அடிகள் தெரிவித்தார். (த-30)


## பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு, இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன. சந்தைகளிற் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2005.09.03 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

*தகைமைகள்:*

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரணதரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02) அகவை 18-35 வரை இருத்தல் வேண்டும்.
03) நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

*நேர்முகத்தேர்வு நடைபெறும்*

**நாள்: 2005/09/03 சனிக்கிழமை**
**நேரம்: காலை 10.00 மணி**
**இடம் : 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.**

**ஆளுநகை, சந்தைப்பகுதி, யாழ்.மாவட்டம்.**

(39424)(13.15.46)

## சக்தி TV, சக்தி FM இன் 7வது பிறந்தநாள் கொண்டாட்டம் 2005

யாழ். மாவட்டத்திற்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

### போட்டி நிபந்தனைகள்:

✓ போட்டியானது ஆண்/பெண் இரு பாலாருக்குமானதாகும்.
✓ மேற்படி போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர/வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
✓ 15 வயதிற்கு மேற்பட்டோர் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும்.
✓ இவ்விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை நகல் பிரதி ஒன்றையும் இணைத்து 05.09.2005 க்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சக்தி TV, சக்தி FM சைக்கிள் ஓட்டப்போட்டி**
**C/o உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் :................................
2. விலாசம் :................................
3. பிறந்த திகதி :................................
4. தொலைபேசி இல :................................
5. தேசிய அ.அட்டை இல :................................
6. பால் :................................

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், நடுவர்களின் தீர்ப்புகளிற்கும் ஏற்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமையவும் இப்போட்டியில் கலந்துகொள்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......... ..........
திகதி கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை - நல்லூர் பாதயாத்திரை இன்று விசேட பூசையுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.31

சப்த தீவக திவ்ய ஜீவன சங்க மாசத்தினரின் ஏற்பாட்டில், நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவையொட்டி ஆண்டு தோறும் நடைபெறும் நயினை- நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை - இன்று புதன்கிழமை காலை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லூர் நோக்கிப் புறப்படவுள்ளது.

நேற்று மாலை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாட்டைத் தொடர்ந்து திருமுறைப் பஜனை நடைபெற்றது. தெடர்ந்து இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை நயினை வடமேற்கு படகுத்துறை அருள் ஞானவைரவர் ஆலயத்தில் பஜனை நடைபெற்றது.

இன்று புதன்கிழமை காலை நயினை அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகள், அபிசேகம், வேல்பூசை என்பன இடம்பெற்று வேல் எடுத்துக்கொண்டு திருத்தலப் பஜனை யாத்திரை ஆரம்பமாகும்.

அங்கிருந்து குறிகட்டுவான் மனோன்மணி அம்பாள் ஆலயத்தை அடைந்து அங்கும் நடக்கும் வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து புங்குடுதீவு காளிகா பரமேஸ்வரி, கிராஞ்சி முருகன், புங்குடுதீவு மத்தி விநாயகர் ஆகிய ஆலயங்களை வழிபட்டு மாலை சர்வோதயத்தில் பிரார்த்தனை இடம்பெறும்.

தொடர்ந்து முத்துமாரி அம்மன், தென் பெரும்துறை சிவன், ஆதி வைரவர் ஆகிய ஆலயங்களில் நடைபெறும். பூசை, வழிபாடு, பஜனையைத் தொடர்ந்து பாதயாத்திரைக் குழுவினர் அன்றிரவு கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தங்கி பஜனை நிகழ்த்துவர்.


நாளை வியாழக்கிழமை பாத யாத்திரைக் குழுவினர் அங்கிருந்து விநாயகர், முருகன், ஐயனார் ஆலயங்களில் வழிபாட்டை முடித்துக் கொண்டு நண்பகல் வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்திற்கு வருகைதந்து அங்கு பூசைவழிபாடு, கந்தரனுபூதி முற்றோதல், மகேஸ்வரபூசை என்பனவற்றில் கலந்துகொள்வார்கள்.

தொடர்ந்து பஜனை, பாதயாத்திரை மண்கும்பான், அல்லைப்பிட்டி, பண்ணைவழியாகக் கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து பஸ்நிலைய வைரவர் ஆலயம், சத்திரம் ஞானவைரவர், கொட்டடி, கூழாவடி வைரவர், நாவாந்துறை ஞானவைரவர், நாகபூஷணி அம்பாள் ஆகிய ஆலயங்களை சென்றடைந்து அங்கிருந்து வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை வந்தடையும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை சீனிவாசகம் வீதிவழியாக சிவன், காளியம்பாள், பெருமாள் கோயில் வழியாகக் கந்தர்மடம் சிவ உதயநாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து பாத யாத்திரைக்குழுவினர் அரசடி வீதி வழியாக நல்லை ஆதீனம் சென்று நல்லைக்கந்தனின் தேரின் பின் திருவீதி பஜனை நடத்துவர். அத்துடன் பாதயாத்திரை நிறைவுபெறும்.

(எ-203)

## பேச்சாற்றலை விருத்திசெய்ய மாணவருக்குச் சொல்லாடற் களம்



சொல்லாடற்களத்தைப் பார்வையிட வருகைதந்திருந்த மாணவர்களில் ஒரு பகுதியினர்.

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்.மத்திய கல்லூரியினர் மாணவர்களின் பேச்சாற்றலையும் தர்க்கத்திறனையும் விருத்திசெய்யும் நோக்குடன் கடந்த 17ஆம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில் நடத்திய சொல்லாடற்களம் வாரம் ஒரு வலம் நிகழ்வில் யாழ்.மத்தியகல்லூரி அணி வெற்றிபெற்றது.

கம்பராமாயணத்தில் மனித விழுமியங்களைப் பெரிதும் புலப்படுத்தியவை ஆண் கதாபாத்திரங்களா பெண் கதாபாத்திரங்களா என்னும் தலைப்பில் இந்த சொல்லாடற்களம் நடைபெற்றது.

மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி நடுநிலை வகிக்க ஆண் கதாபாத்திரங்கள் எனும் தலைப்பில் உடுவில் மகளிர் கல்லூரியினரும் பெண் கதாபாத்திரங்கள் எனும் தலைப்பில் யாழ்.மத்திய கல்லூரியினரும் வாதிட்டனர்.

முடிவில் பெண் கதாபாத்திரங்களே என்ற தலைப்பில் வாதிட்ட அணியினர் வெற்றி பெற்றனர்.

இந்நிகழ்வில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் உரையாற்றுகையில், பாடசாலைகள் யாவும் இந்தக் களத்தில் ஆர்வத்துடன் ஈடுபட முன் வரவேண்டும் அதன் மூலம் வாதத்திறனை விருத்தி செய்ய முடியும் - என்றார்.

(3-203)



யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்ற ஊழியர்களின் இசைக்குழுவினர் நல்லூரில் இசைநிகழ்ச்சி நடத்துவதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.31

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கந்தபுராணம் என்னும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா தெடர்சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.

அதில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு 'பானுகோபன் யுத்தம்' பற்றி உரை நிகழ்த்துவார்.

(204)

* * *

யாழ்ப்பாணம், ஓக .31

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 22ஆம் நாளான இன்று புதன்கிழமை எஸ்.கணபதிப்பிள்ளையின் பாட்டுக் கச்சேரி நடைபெறும்.


வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்பர்.

(204)




## நல்லூர் உற்சவ காலச் சிறப்பகம்

இருபத்திரண்டாம் நாள் திருவிழா



### அதிசயங்கள் மெத்தவடி



மாறிப் பொறிவழிபோய்க் - கிளியே!
மாறாட்டம் கொள்ளாதே
ஆறி நடந்துவாடி - கிளியே!
அதிசயங்கள் மெத்தவடி.

- யோகர் சுவாமிகள்.

### அரந்தை தீர அவனடி ஏத்துவீர்

கட்டளைக் கலிப்பா

பிரண வப் பொருள் தெரியாப் பிரமனின்
பெருந்த லைதனிற் குட்டியே யன்னதை
அரன் தன் காதினி லோதியும் வைவேலால்
அடர்ந்துச் சூரனைத் தாக்கி அமரர் கோன்
புரந்த நாட்டை அவற்சிர்ந்த கந்தனாம்
பெருமான் நல்லூரில் பேணிக்கோயில் கொண்டான்
அரந்தை தீர அவனடி ஏத்துவீர்
ஐயன் மெய்யற்கு மெய்யன் அறிவீரே.

கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம்.

### கூரியவேல் என்றும் துணை

வேலவனே வேழ முகத்தோனின் பின்னவனே
காலமெலாம் காக்கும் கடவுளே - ஞாலமதில்
துன்பம் துடைத்து துயரின்றி நாம் இங்கு
இன்பநல் வாழ்வுற வைப்பாய்
சேவற் கொடியோனே சிங்கார வேலவனே
நாவற் பழமொன்று நல்கினை நீ - நோவுற்றே
சுட்டபழம் வேண்டிநின்ற ஔவை தலைகுனிந்து
வெட்கிட வைத்த விறலோய்
கண்கண்ட தெய்வம்நீ கந்தனே கருணையுளம்
கொண்டுமே நல்லைநகர் நடுவுற்றாய் - தொண்டர் குழாம்
பூரிக்கும் வண்ணம் புகழ்பூத்த நின்கரத்தின்
கூரியவேல் என்றும் துணை.

சி.ச.வைரமுத்து.

### அருள் தா நல்லைக் கந்தனே!

ஒரு கால் நினைக்கின் இரு காலும் தோன்றி
ஓம் முருகா என நின்பேர் ஓதுவார்க்கு
வருவினைகள் தீர்த்து அருள் பொருளையீந்து
வழி நடத்தி முத்திப் பேறருளும் ஞானத்
திருமுருகா அஞ்சு முகங்கொள் பக்தார்க்குத்
திடமளித்து ஆறுமுகம் காட்டும் வேலா
பெருகுக சுப்பிரமணியா தமிழினத்தின்
வாழ்வுயர்த்தும் நல்லைக் கந்தா....

- சி.சிவசெந்தூரன்.

### குமரனே எமை என்றும் ஆளவேண்டும்!

"கானமயிலின் களிநடனம் காணவேண்டும்
கந்தா உன் திருப்புகழைப் பாடவேண்டும்
மான்மகளாம் வள்ளி தெய்வயானையோடு
மகிழ்ந்திருக்கும் மாட்சியில் நாம் வாழவேண்டும்
சின்னையன் சேவடியைப் போற்றவேண்டும்
சிந்தையிலே அவன் அருளைத் தேக்க வேண்டும்
கோனாகிக் குடியிருக்கும் கோவில் நல்லைக்
குமரனே எமை என்றும் ஆள வேண்டும்"

- தேவி கணேஸ்

### அருட்பார்வை ஒன்று போதும்

நலம் நாடி உனைத்தேடி
நல்லூரில் கோடி பக்தர்
சிரம் தாழ்த்தி கரம் கூப்பி
வரம் வேண்டி நிறைந்திருக்க
வேல் ஏந்தி மால் மருகா - நீ
கோலமுடன் வரும் காட்சி
காண நம் இரு கண்கள்
செய்த தவம் எப்பெரிதோ!
பொல்லாத வினைகள் எம்மை
சொல்லாமல் சூழ்ந்திடினும் - உன்
அருட் பார்வை ஒன்று போதும்
அத்தனையும் தவிடுபொடி
சித்தம் தெளிந்திடவே
நித்தம் உன் வாசலிலே
பக்தியுடன் குவிகின்றோம்
காத்திடுவாய் எமை நீயே!

- அளவையூர் இ.ஸ்ரீபுநாதனி

### மோனமே வடிவமான முருகவேள் போற்றி

ஆனநற் கல்வி ஞானம்
அருந்தவம் பேணி நிற்கும்
மானமார் தமிழ ரெல்லாம்
மகிழ்வுடன் கூடி பேத்தும்
தேனமர் சோலை சூழும்
திருநல்லூ ராளு கின்ற
மோனமே வடிவ மான
முருகவேள் போற்றி போற்றி

-சி.சக்திகா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி கோரல்

கீழ்வரும் வேலைக்கு இக்ராட் (ICTAD) M8 ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1.கேள்விப் பத்திரங்கள் 30.08.2005ஆம் திகதி தொடக்கம் 15.09.2005ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும்.
2.கேள்விகள் 16.09.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்கப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்வி கோரியவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

| 3. வேலைவிவரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பணம் |
|---|---|---|
| வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபம் அமைத்தல் கட்டம் I | 20,000/ | 1,000/ |

4. கேள்விப் பத்திரங்களை அரக்கு முத்திரையிட்டு பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைய கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் உள்ளடங்கியுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பிரதேச செயலக மாநாட்டு மண்டபம் அமைத்தல்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
5. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6.இக்கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**மு.நந்தகோபாலன்,**
**உதவிப் பிரதேச செயலர்/ பிரதேச செயலக கேள்விச் சபைத் தலைவர்,**
**பிரதேச செயலகம்,**
**வேலணை.**
(C/44855)(42-11-18)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

*அன்புடையீர்!*
*நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆவணி மாதம் 16ஆம் நாள் (01.09.2005) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் 11.30 மணி (புதிய நேரம்) வரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில்*

*எமது சிரேஷ்ட புதல்வன்*
*திருநிறை செல்வன்*
**துஷியந்தன்** *(துஷி)*
*அவர்களுக்கும்*

*எமது கனிஷ்ட புதல்வி*
*திருநிறை செல்வி*
**ராதிகா** *(விஜிதா)*
*அவர்களுக்கும்*

*இறைவன் திருவருள் துணைகொண்டு நெல்லியடி நெல்லை முருகன் கல்யாண மண்டபத்தில், திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*
*தங்கள் நல்வரவை நாடும்*

**திரு.திருமதி சாமிநாதன் குடும்பம்**
**இல.585, 6 ஆம் படிவம்,**
**இராமநாதபுரம்.**

**திரு.திருமதி ஆனந்தராசா குடும்பம்**
**புட்டணி வீதி,**
**வல்வெட்டித்துறை.**

*[இருவீட்டார் அழைப்பு]*
(39449)(42-11-18)

## நெடுந்தீவில் கடும் வரட்சி

நெடுந்தீவில் தற்போது கடும் வரட்சியான கால நிலை நிலவி வருகிறது. இதனால், இங்குள்ள கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. இரவு நேரங்களில் கடலில் இருந்து குடியிருப்புக்களை நோக்கி குளிர் காற்று பலமாக வீசுகின்றது. கிணற்றுநீர் வற்றி வருவதனாலும் வரட்சியான காலநிலை நிலவி வருவதனாலும் பயிர்கள் வாடி வருகின் றன. இப்பகுதிக் குடியிருப்பாளர்களது ஆடுகள், மாடுகள் காட்டுப் பகுதிக்குப் படையெடுத்துச் சென்று புல் பூண்டுகளைத் தின்கின்றன. காட்டுப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் காணப்படும் குதிரைகளும் கடலில் இறங்கி கடல் நீரையே பருகி வருவதைக் கடற் பகுதிகளில் காணமுடிகிறது. நெடுந்தீவு மக்களுக்கான குடிதண்ணீர் குழாய் மூலம் குடியிருப்புக்களில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தொட்டிகளினூடாக விநியோகிக்கப்படுகிறது. இந்த குடிதண்ணீரை குழாய் மூலம் விநியோகிப்பதற்காக நெடுந்தீவு மேற்குப் பகுதியிலுள்ள சாராப்பிட்டி எனுமிடத்தில் பாரிய குடிதண்ணீர்க் கிணறுகள் நீர் வழங்கல் சபையால் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-51)

## கருவாடுகளுக்கு நெடுந்தீவில் தட்டுப்பாடு

நெடுந்தீவில் கருவாட்டுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவிவருகிறது. இங்கு நாளாந்தம் பிடிக்கப்பட்டு சந்தையில் விற்கப்படுகின்ற மீன்கள் தவிர எஞ்சியவை மீனவர்களால் கருவாடு போடப்படுகின்றன. இக் கருவாடுகள் மாலை நேரங்களில் நெடுந்தீவை நோக்கி பிளாஸ்ரிக் படகுகளில் வரும் மன்னார் வியாபாரிகளால் வாங்கப்பட்டு மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனால் மீன், கருவாட்டுக்குத் தட்டுப்பாடு உருவாகியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். சூடை மீன்கருவாடு கிலோ 60 ரூபாவாக வும் கும்பளா மீன் கருவாடு 140 ரூபாவாக வும் பாரைமீன் கருவாடு 250 ரூபாவாகவும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. பாரை மீன் கருவாடு வியாபாரிகளாலேயே கொள்வனவு செய்யப்படுவதனால் சாதாரண [illegible] எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-51)

உ
சிவமயம்

# முதலாவது வருட (ஆப்திக) சிராத்த தினம் 31.08.2005



## திருமதி மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

அன்னை மடியில் 11-08-1930
அம்பலத்தாடுவான் அடியில் 11-09-2004

*அன்புத் தெய்வமே!*

*எங்களைத் தமது இரு கண்ணின் மணிகளாகக் கருதிப் பாதுகாத்து வழிகாட்டி வாழச் செய்தீரே மறப்போமா? தாங்கள் உடல் நீத்த நாள் தொட்டுத் தங்கள் பெயரால் செய்ய வேண்டிய அபரக்கிரியைகள் யாவற்றையும் பக்தி பூர்வமாகத் திறம்படச் செய்து, தேவர்களையும் பிதிரர்களையும் ''பிரீதிப்படுத்தி'' அவர்கள் மூலம் வேண்டிய தானங்களை எல்லாம் அனுப்பித் தங்களைத் திருப்திப்படுத்தியுள்ளோம். முதலாவது வருட முடிவில் (ஆவணி மாத அபர பக்கத் துவாதசியாகிய) இன்று நிகழும் (ஆப்திக) சிராத்த தானங்களுந் தம்மை வந்தடையும் என்பதில் நிலையான நம்பிக்கையுண்டு. எங்கள் வாழ்வை மேலும் வளம் பெறச் செய்வீர்களாக. வீட்டுக்கிருத்திய நிகழ்வில் ''அகத்தியர் தேவாரத் திரட்டினைச்'' சமர்ப்பணம் செய்திருந்தோம். இன்று ''சைவத்திருமுறைத்திரட்டு'' என்னும் நூலினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.*

*அன்புடையீர்!*

*மேற்படி சிராத்தம் இன்று (31.08.2005) புதன்கிழமை மு.ப.11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

'எமநேசர்',
[illegible] வீதி, [illegible] மார்கட்டு, யாழ்ப்பாணம்.

**- குடும்பத்தினர்.**
(39465)(32-11-18-42)


# மனமுவந்து வாழ்த்துகின்றோம்



*மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள உயர்திரு.*

**துரைசிங்கம் ரகு**

*அவர்களை மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று எம்நாட்டு மக்களுக்கு சேவைகள் பல புரிய வாழ்த்துகின்றோம்.*

**அலங்கார் நகைமாளிகை,**
*21/7, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
TELE.: 021 222 2920.


# கேள்வி அறிவித்தல்

**வீடமைப்பு, நிர்மாணத்துறை, கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு**

## *கட்டடங்கள் திணைக்களம்*

01.யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் நிர்வாகப் பிரிவுக் கட்டட மேம்படுத்தலும் திருத்தலுக்குமான சீலிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 2005.09.09 மு.ப.10 மணி வரை கோரப்படுகின்றன.
02.கேள்விப்பத்திரங்கள் 2005.09.05 ஆம் திகதி பி.ப.3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணங்கள் ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா.1000.00) செலுத்தி *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
03.கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04.கேள்விதாரர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் (இக்ராட்) அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தரம் எம் 8 மற்றும் அதற்கு மேல் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்துகொண்ட மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்க அங்கத்தவராயுமிருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் பெறுமுன் ஒப்பந்தகாரர் பதிவுத் புத்தகம் NCASL அங்கத்துவ அட்டை என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
05.பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், மே/பா.பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.
06.தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
07.கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விவரங்கள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

☎ 021 2222781.

**W.S.மொல்லிகொட,**
**கட்டடங்கள் பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**'செத்சிரிபாய',**
**ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே, பத்தரமுல்ல.**
(C/44857)(42-11-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மகாவித்தியாலய நூலகத்திற்கென தமிழீழ வைப்பகத்தினர் நூல்களை அன்பளிப்புச் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில், வித்தியாலய முதல்வர் செ.அல்பிறட்டிடம் தமிழீழ வைப்பகத்தின் ஆளுகை மேலாளர் க.பாலகிருஷ்ணன் நூல்களைக் கையளிப்பதையும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.அன்ரனி ஜெகநாதன் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.
தமிழீழ வைப்பகத்தில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்த மாணவன் ஒருவனுக்குத் தமிழீழ வைப்பகத்தின் மேலாளர் வீரத்தேவன் அதற்கான கணக்குப் புத்தகத்தை வழங்குவதையும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் ஏனைய படங்களில் காணலாம்.
(படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)

# கிளிநொச்சியில் சுதேச மருத்துவம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது

## தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் கவலை

கிளிநொச்சி,ஓக.31

கிளிநொச்சி மாவட்டத்தில் சுதேச மருத்துவ மேம்பாடு பின்தங்கிய நிலையில் உள்ளதென தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் கவலை தெரிவித்தார்.

தமிழீழ சுகாதார சேவைகள் பணிமனையில் சுதேச மருத்துவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துரை வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சுதேச மருத்துவத்துறை மேம்பட்டுள்ளது. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

வன்னிச் செய்திகள்

இம்மாவட்டத்தில் சுதேச மருத்துவத்தை மேம்பாடு அடையச் செய்வதற்குச் சுதேச மருத்துவத்துறை தொடர்பில் செயற்படும் திணைக்களங்கள் வேகமான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சுதேச மருத்துவர்கள் தமது மருத்துவத் துறையினை வளர்க்க அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் - என்றார்.

இதேவேளை, சுதேச மருத்துவர்களும் ஆங்கில மருந்து விற்பனை உரிமையாளர்களும் தமிழீழ சுகாதார சேவையால் அனுப்பி வைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்குகமைவாகச் செயற்படவேண்டும் என்றும் அவ்வாறு செயற்படாத சகல நிலையங்கள் மீதும் தமிழீழ சுகாதாரச் சேவையினர் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (த-202)

# மோ.சைக்கிள் உதிரிப்பாகங்களின் விலை உச்சம்; நுகர்வோர் பாதிப்பு!

வெள்ளாங்குளம்,ஓக.31

வன்னிப் பெருநிலப்பரப்பில் இந்தியன் தயாரிப்பு மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படவில்லை. இதனால், கடைகளில் அவற்றின் விலை உச்சமாகக் காணப்படுகிறது. வெவ்வேறு கடைகளில் வேறுபட்ட விலைகளில் உதிரிப்பாகங்கள் விற்கப்படுகின்றன. இதனால், நுகர்வோர் பெரும் பாதிப்பு அடைகின்றனர்.

வன்னியில் தற்போது அதிகளவான இந்திய மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், வன்னியில் மோட்டார் சைக்கிள்களின் பாவனையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்களுக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படவில்லை. இதனால் ஒரே இடத்தில் உள்ள கடைகளில் ஒரு பொருள் பல்வேறு விலைகளில் விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டோர் இதில் தலையிட்டு உடனடியாக அவற்றுக்குக் கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயித்து நுகர்வோரைப் பாதுகாக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-415)

# தமிழீழ வைப்பகத்தால் நூல்கள் அன்பளிப்பு

புதுக்குடியிருப்பு,ஓக.31

முல்லைத்தீவு தமிழீழ வைப்பகத்தினர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நூல்களை பாடசாலை நூலகத்துக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினைக் கோட்டக்கல்வி அதிகாரி ம.அன்ரனி ஜெகநாதன், வைப்பக மேலாளர் ம.வீரத்தேவன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வித்தியாலய அதிபர் செ.அல்பிறட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி, வைப்பக ஆளுகை மேலாளர் க.பாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

கோட்டக் கல்வி அதிகாரி, தனது உரையில் நூல்களின் அதிஉச்சப் பயன்பாடு பற்றியும் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் எடுத்துக்கூறினார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்கள் வைப்பகத்தில் தேட்டக் கணக்குகளை ஆரம்பித்தனர். அமுதன் தேட்டக் கணக்கில் 14 மாணவர்களும் பிள்ளைகள் தேட்டக் கணக்கில் 129 மாணவர்களும் வளர்ந்தோர் தேட்டக் கணக்கில் 10 மாணவர்களுமாக மொத்தம் 153 மாணவர்களுக்குக் கணக்குகள் திறக்கப்பட்டன.

(த-353)

## ஸ்கந்தா ஸ்ரார் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# மானிப்பாய் பரிஷ் 5 விக்கெட்டுகளால் வெற்றி

யாழ். விளையாட்டுத்துறையின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அமரர் ஜெயசோதி துஸ்யந்தனின் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் வி.க. 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி மோதியதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

ரஜீவ்குமார், ஈழமாறன், கலிஸ்ரன், ரஜீத் ஆகியோர் முறையே 52, 13, 10, 07 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பாஸ்கரன் 7 விக்கெட்டுக்களையும், சாத்வீகன், கிசோக்குமார், ஜெயதிஸ் முறையே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

விளையாட்டு

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

சிவாஸ், பார்த்தீபன் முறையே ஆட்டம் இழக்காமல் 15, 14 ஓட்டங்களையும் ஜெயதி, பாஸ்கரன் முறையே 24, 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சத்தியன் மூன்று விக்கெட்டுகளையும் யசோதரன் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக வீரன் எஸ்.பாஸ்கரன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

# ஸ்கந்தா ஸ்ரார் வெற்றியீட்டியது

இந்தச் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் 4 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் ஒல்கோட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்திலே முதலில் துடுப்பெடுத்தாடிய ஒல்கோட்ஸ் விளையாட்டுக்கழக அணி 9 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

நிறோசன், ஜெயசுதன், குகன், தீலிபன் ஆகியோர் முறையே 31, 27, 22, 40 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கார்த்தீபன் மூன்று விக்கெட்டுக்களையும் நிறோயன் இரண்டு விக்கெட்டுக்களையும் ராஜ்குமார், மயூரன், வரேத்திரன் முறையே தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் வி.க. அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை எட்டியது.

யசிதரன், கபிலன், நிறோயன், சிவகரன், ஜலன்ஸ், நிசாகரன், சிவசுதன் ஆகியோர் முறையே 21, 17, 16, 20, 17, 25, 42 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பினோஸ் மூன்று விக்கெட்டுக்களையும் தீலிபன், செந்தூரன், ஜயசுதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ஸ்கந்தா ஸ்ரார் வீரன் சிவசுதன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

## தேசிய மட்ட தடகளப் போட்டி

# 4 தங்கம் உட்பட 13 பதக்கங்கள் வடக்கு - கிழக்கிற்குக் கிடைத்தன

யாழ்ப்பாணம்,ஓக.31

மாத்தளையில் நடைபெற்ற 31ஆவது தேசிய தடகளப்போட்டியில் வடக்கு - கிழக்கு மாகாணம் 4 தங்கப்பதக்கங்கள் உட்பட 13 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

2003ஆம் ஆண்டு 5 வெண்கலப் பதக்கங்களையும் 2004 ஆம் ஆண்டு ஒரு தங்கப் பதக்கம் உட்பட ஆறு பதக்கங்களை வடக்கு - கிழக்கு மாகாணம் பெற்றிருந்தது.

இவ்வாண்டு நடந்த தேசிய தடகளப் போட்டியில் வடக்கு - கிழக்கு 4 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 6 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளது.

வடக்கு - கிழக்கில் பதக்கம் பெற்றோரும் அவர்கள் பங்குபற்றிய போட்டிகளும் வருமாறு:-

✱ கே.ஜி.எஸ்.சந்திராணி (வவுனியா) - மரதன் ஓட்டம் - தங்கம், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - வெள்ளி, 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - வெண்கலம்.

✱ எஸ்.பிரதீப்குமார் (யாழ்ப்பாணம்)- குண்டெறிதல் - தங்கம்.

✱ எஸ்.கமலமோகன் (யாழ்ப்பாணம்) - உயரம்பாய்தல் -தங்கம்.

✱ ஆர்.ரதீசன் (திருகோணமலை) - நீளம் பாய்தல் - வெண்கலம்.

✱ எஸ்.நிரஞ்சன் (முல்லைத்தீவு) - 400 மீற்றர் ஓட்டம் - வெள்ளி.

✱ 4x400 அஞ்சல் - வெண்கலம்.

✱ கே.கே.ஜெயசந்திர (திருகோணலை) - குத்துச்சண்டை - தங்கம்.

✱ கே.எ.பி. கண்டஆரய்சி (திருகோணமலை) - குத்துச்சண்டை - வெள்ளி.

✱ எஸ்.எஸ்.பண்டார (திருகோணமலை) - குத்துச்சண்டை - வெண்கலம்.

✱ ஆண்களுக்கான உதைபந்தாட்டம் - வெண்கலம். ✱ ஆண்களுக்கான கபடி - வெண்கலம். (3-190-203)

# பருத்தித்துறையில் ஆட்டங்கள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:- இன்று - மாலை 3.30 மணி - கழுகுகள் வி.க. எதிர் யங்கம் பன்ஸ் வி.க. நாளை - மாலை 3.30 மணி - திக்கம் இளைஞர் வி.க. எதிர் தொண்டைமானாறு ஒற்றுமை வி.க. (3-190)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நட்டஈடு

தென்மராட்சி,ஓக.31

பாரஊர்தி மோதியதில் மரணமான இளைஞனின் குடும்பத்தின ருக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் மட்டுவில் பகுதியில் பாரஊர்தியும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்த சிவயோகநாதன் இராஜரூபன் என்பவர் பலியானார்.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் நடைபெற்றபோது இரு பகுதியினரும் சமரசமாகப்போவதாக தெரிவிக்கப்பட்டதை யடுத்து பார ஊர்திச் சாரதி 4 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும் இறந்த இளைஞனின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (த-117)


## அண்ணா கோப்பி
## திருவிழாக்கால விற்பனை நிலையம்

நல்லூரில் நல்லைஆதீனம் முன்பாக அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விற்பனை நிலையத்தில் ரூபா 100/- கொடுத்து அண்ணா தயாரிப்புகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்வதோடு, இனாம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். (சி/44864)(32-19-17)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மலராக 1934 ஓ 06 ஓ 04



விண்ணில் கதிராக 2005 ஓ 07 ஓ 30

## அமரர் பிலிப் யோசப் இராசநாயகம்

*(இளைப்பாறிய இராணுவ அதிகாரி ) (இறைசமூகப் பணியாளன்)*

*''உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க, அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்''*

இன்று [31.08.2005] புதன்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கரவெட்டி புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''றாசா ஸ்ரான்'',
பெற்றோல் நிலைய ஒழுங்கை,
நெல்லியடி, கரவெட்டி. [39476][40-02-17-19]

## முன்பள்ளிக் கட்டட திறப்புவிழா

கோண்டாவில்,ஓக.31

இணுவில் கந்தசுவாமிகோவில் இளந்தொண்டர் சபையின் சண்முகநாதன் சசிகரன் ஞாபகார்த்த முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா இன்று புதன்கிழமை காலை 6.05 மணிமுதல் காலை 7 மணிவரையுள்ள சுபவேளையில் இளந்தொண்டர் சபை தலைவர் நா.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை நிகழ்வாக ஆசியுரை, வாழ்த்துரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்று, பின்னர் முன்பள்ளிக் கட்டடத்தை நிர்மாணித்து வழங்கிய குடும்பத்தினருக்கு இளந்தொண்டர் சபை சார்பில் நினைவுப் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து கலைநிகழ்வுகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-49)

## மீனவருக்கு கொட்டகைகள் அமைக்கக் கோரிக்கை

யாழ் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அலுப்பாந்திக் கடற்பகுதியில் வள்ளங்கள் தரித்து நிற்பதற்குப் படையினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து இப்பகுதியில் மீனவர்கள் தங்குவதற்கான கொட்டகைகளை அமைத்துதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி அமைப்பிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களின் இணையம் தெரிவித்துள்ளது. (த-51)


## தேவை

*புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் புதிதாகப் பழக விரும்புபவர்களும் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.*

தொடர்பு:
அபிராமி ரெக்ஸ்
155, நவீன சந்தை ,
(39381)(32-17-19) யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

### K.R.சிவலோகநாதன் விதுர்ஷன்



*திருமிகு K.R. சிவலோகநாதன் அவர்களின் அருமைப் புதல்வன் விதுர்ஷன் அவர்களின் மறைவையொட்டி நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரது பேரிழப்பால் ஏற்பட்ட அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரினை நாமும் பகிர்ந்துகொள்கின்றோம். விதுர் ஷனின் ஆத்மா சாந்திபெற பிரார்த்தித்து, இறைவனிடம் வேண்டுகின்றோம்.*

டயமன் றேடர்ஸ்,
சுன்னாகம். [39475][32-17-19]

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்

*1. வணிகமாணி பகுதி I - 2002*
*2. வணிகமாணி பகுதி II- 2002*
*3. வணிகமாணி பகுதி III - 2002*

*மேற்படி பரீட்சைகளை 19.09.2005 திங்கட்கிழமை தொடக்கம் 03.10.2005 திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*1. வணிகமாணி பகுதி I - 2002 (19.09.2005 - 26.09.2005)*
*2. வணிகமாணி பகுதி II - 2002 (19.09.2005 - 24.09.2005)*
*3. வணிகமாணி பகுதி III - 2002 (26.09.2005 -03.10.2005)*

*பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் வணிகமாணி பகுதி - I மற்றும் பகுதி - II இற்கு தோற்றுபவர்கள் 14.09.2005 தொடக்கமும் வணிகமாணி பகுதி - III இற்கு தோற்றுபவர்கள் 21.09.2005 தொடக்கமும் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம்.*

*மேலதிக விவரங்களுக்கு 021 - 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.*

**பதிவாளர்**
30.08.2005. (சி/44698)(32-17-19)


இதோ! இன்று யாழ் நகரில்...



உங்கள் தேவைக்கான
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின்
மகத்தான தரமான தெரிவுகளுக்கு
நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்:-
மகா சில்க்ஸ்
இல.32,40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.



கிளை நிறுவனமான
பியூட்டி சில்க்ஸ் BS
இல.69,நவீன சந்தை(உட்புறம்)-யாழ்ப்பாணம்
கிளை நிறுவனமான
கவுஸ் ஒவ் செலெக்ஷன்
உங்கள் புடைவைத் தேவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
தனது நான்காவது வருட சேவையில் அநேக
வாடிக்கையாளர்களின் உள்ளங்களைக்
கொள்ளை கொண்டு மகத்தான சேவையாற்றி இப்போது
ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது
என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்



House of Selection
இல,75B பெரியகடை வீதி,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கத்திரினா' சூறாவளி தாக்கியதில் அமெரிக்காவில் 55 பேர் உயிரிழப்பு!

அமெரிக்காவில் மையம் கொண்டுள்ள 'கத்தரினா' சூறாவளியினால் 55ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 250 கோடி அமெரிக்க டொலர் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்காவின் கடற்கரைப் பிரதேசங்களை தாக்கியுள்ள இந்தச் சூறாவளி மணிக்கு 400 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை அமெரிக்காவைத் தாக்கியுள்ள சூறாவளிகளில் அதிக சக்திவாய்ந்ததும் சேதங்களை விளைவித்ததும் இந்தச் சூறாவளியே என செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த கடுமையான சூறாவளியினால் மெக்ஸிகோவளை குடாவிலுள்ள இரு எண்ணெய் வளையங்கள் சேதமாகியுள்ளன என்றும்-

ஆயிரக்கணக்கான மக்கள் தம்மை காப்பாற்றுமாறு கோரி வீடுகளின் கூரைகளில் ஏறியுள்ளர் என்றும்-

அவர்களை மீட்பதற்கு ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

மிசிசிப்பியின் பிரதான நகரங்களான பிலொக்ஷி மற்றும் வளைகுடா துறைமுகம் ஆகியவற்றை கடுமையாக தாக்கிய இந்த சூறாவளி நேற்றுப் பகல் 'நிவ் ஓரியனாஸ்' நகரில் வீசுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு தொன் அளவுள்ள செங்கற்களை அள்ளிக்கொண்டு வந்து தாக்கியது போன்று இந்தச் சூறாவளியில் கட்டடங்கள் விழ்ந்தன மரங்கள் வேருடன் சாய்க்கப்பட் டன. - என்றும்.

நீர்வீழ்ச்சியிலிருந்து விழுவது போல் வெள்ளம் வேகமாக ஓடியது என்றும் பொதுமகன் ஒருவர் கூறினார்.

வீதிகள் எங்கும் கார்கள் ஆங்காங்கு நிறுத்தப்பட்டுள்ளன. வீடுகளை விட்டு வெளியில் கிளம்பியோர் மீண்டும் வீடு திரும்ப முடியாது தவித்த வண்ணம் உள்ளனர்.

சூறாவளியால் தாக்கப்பட்டுள்ள லுயிசினா, மிசிசிப்பி ஆகிய பகுதிகளில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

(க-8)


## வேலையாள்கள் தேவை

புடைவை விற்பனை நிலையத்திற்கும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கும் வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.

தொடர்பு : துணிஸ் றெக்ஸ், மூத்தநயினார் கோயிலடி, நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(39457)


## தவறிவிட்டது

கொள்ளுபிட்டியைச் சேர்ந்த சற்குணராசா சபேஸ் என்பவருடைய தே.அ.அட்டை (இல: 783031647 X), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன சுன்னாகத்தில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள்

**தாஸ் ஹொட்டல்**

கே.கே.எஸ். றோட், சுன்னாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

ச.சபேஸ்.

(அ/44668)


**G.A.Q 2006/07 பேராதனை (வெளிவாரி)**

* பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குரிய விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.

**G.A.Q, 1st IN Com யாழ்ப்பாணம்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 04. 09. 2005

விவரங்களுக்கு:- S. அருள்நங்கை, புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(39482)(38-15-45)


# தீவிரவாதிகள் குறித்த தகவல்களை 'சார்க்' நாடுகள் பரிமாற முடிவு

காத்மாண்டு, ஓக.31

தெற்கு ஆசியாவில் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை பரிமாறிக்கொள்ள வேண்டும் என்று சார்க் நாடுகளின் தகவல் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சார்க் அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளின் தகவல் துறை அமைச்சர்களைக் கொண்ட இரண்டு நாள் மாநாடு நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நேற்று முன்தினம் தொடங்கியது. மன்னர் ஜியானேந்திரா இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். நேபாளத்தில் அனைத்து அதிகாரங்களையும் மன்னர் ஜியானேந்திரா கைப்பற்றிய பின் அங்கு சர்வதேச அளவிலான மாநாடு ஒன்று நடப்பது இதுவே முதல்தடவை.

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் ஜெய்பால்ரெட்டி மற்றும் நேபாளம், பாகிஸ்தான், பூட்டான், மாலைத்தீவு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களும் பங்கேற்றனர். மாநாட்டில் நேபாள தகவல் துறை அமைச்சர் டங்கா தகால் பேசுகையில், "சார்க் உறுப்பு நாடுகளில் தீவிரவாதமே முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதை அடியோடு களைய நாம் அனைவரும் பரஸ்பரம் தீவிரவாதிகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும். வளர்ச்சிப் பணிகள் குறித்தான தகவல்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் தெற்கு ஆசிய பகுதியில் நிலவிவரும் வறுமையை விரட்டாலாம்."- என்றார்.

சார்க் உறுப்பு நாடுகளின் தகவல்துறை அமைச்சர்களின் மாநாடு நடப்பது இது ஐந்தாவது முறை. ஊடகத்துறை மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி அதன் அறிக்கையை நவம்பரில் துளீஸ் நகரில் நடக்கும் உலக மாநாட்டில் சமர்ப்பிக்க வேண்டும். அறிக்கை தயார் செய்வது குறித்து மாநாட்டில் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

# ஐ.நா. பாதுகாப்புச் சபை சீர்திருத்தம் சாத்தியமா?

ஐ.நா. பாதுகாப்புச் சபை சீர்திருத்தங்களை நிறைவேற்றுவது தொடர்பாகப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஐ.நா. பாதுகாப்புச் சபை விஸ்தரிப்பு உட்படப் பல்வேறு முக்கிய சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஐ.நா. பொதுச்சபைத் தலைவர் ஜூன் பின் ஐ.நா. சீர்திருத்தங்கள் தொடர்பாக ஒரு முக்கிய தீர்மானத்தை தயாரித்துள்ளார். ஐ.நா. பாதுகாப்புச் சபையை விரிவுப்படுத்துவது உட்படப் பல முக்கிய அம்சங்கள் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மத்தியில் உலகத் தலைவர்களின் கருத்துக்காக விவாதிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் ஐ.நா.சபை சீர்திருத்தங்கள் தொடர்பாக பல்வேறு கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

இதனால், ஐ.நா. சபை சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில் ஒருமித்த கருத்து ஏற்படுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. மேலும் அமெரிக்கா தன்னிச்சையாக ஒரு திட்டத்தைத் தயாரித்து அதை விவாதிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஐ.நா.பொதுச்சபைத் தலைவர் கொடுத்துள்ள பொது நகல் தீர்மானத்தில் சுமார் 400 பந்திகளை நீக்க வேண்டியுள்ளது. என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் கூறியுள்ளார். இந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள சில அம்சங்கள் குறித்து பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் தங்களது தயக்கத்தை தெரிவித்துள்ளனர்.

பொது நகல் தீர்மானத்தில் எதைச் சேர்ப்பது, எதை நீக்குவது என்பது மட்டும் அல்லாமல் சில அடிப்படைப் பிரச்சினைகளையும் உள்நோக்க வேண்டி இருக்கும் என்று அமெரிக்க தூதர் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம் கேட்டு இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய 4 நாடுகள் தாங்களாகவே ஒரு நகல் தீர்மானத்தை தயாரித்து ஐ.நா. பொதுச் சபையில் தாக்கல் செய்துள் ளன. இதற்கு 50க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

191 உறுப்பு நாடுகளைக் கொண்ட 60 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஐ.நா.சபையில் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தங்கள் செய்யப்படுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சரவணபவன்



பெருமாக்கடவை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரவணபவன் (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் ஏக புத்திரனும், இணுவில் கிழக்கைச் சேர்ந்த அம்பிகையின் அன்புக் கணவரும், அபிராமி (4 ஆம் வருடம், சித்தமருத்துவம், யாழ்.பல்கலைக்கழகம்), சிவகாமி, பிரணவன் (2005, கணிதப்பிரிவு, கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தனின் அன்பு மாமனாரும் அன்னபூரணி, பரிபூரணி, தனலஷ்மி, தவமணி, வள்ளிநாயகி ஆகியோரின் சகோதரரும் சிவசக்திவேல், அமரர் சச்சிதானந்தன் , அமரர் கணேசன், இராஜரட்ணம், அரியரட்ணம், அமரர் இரத்தினம், மகேஸ்வரி, பரமேஸ்வரி, வைரவநாதன், உஷாதேவி ஆகியோரின் மைத்துனரும், கஜபதி, ஜனனி, சுஜனி, முரளிபாலகுமார், சிவகுமார், பிரேமினி, சிவசங்கர், சுகந்தன் ஆகியோரின் மாமனாரும் கலைவாணி, முருகானந்தன், சரவணபவன், சாந்தினி, நந்தினி, சுபாசினி, கருணாகரன், தாரணி மயூரன், திரிபுரசுந்தரி இரமணன், பிரசன்னா, பிரதீபா, பிரவீணா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.08.2005 திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேம்போலை, இணுவில் கிழக்கு, இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(39481)(38-15-45)

### கணபதிப்பிள்ளை ஐயாத்துரை



கொழும்புத்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஐயாத்துரை நேற்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வரதலட்சுமியின் (இராசமணி) அன்புக் கணவரும், பேரானந்தன், காலஞ்சென்ற நாகராணி, கருணானந்தன் (நோர்வே), யமுனாராணி காலஞ்சென்ற சிவானந்தன் (பிரான்ஸ்), கமலராணி (ஜேர்மன்), பத்மராணி (லண்டன்), சுரேசானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசு, மனோன்மணி, க.பொன்னுத்துரை, செ.பவளம்மா, தெ.இராசமணி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2005) புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.37, 4 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: ஐ.பேரானந்தன் (மகன்).**

(39479)(38-15-45)


**Jayoda ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6240297 முதல் 6253267 வரை சீட்டிழுப்பு இல. 163 திகதி 29-8-2005

வெற்றி எண்கள் **4 5 3 2 4 6** சுப்பர் எண் **23**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,32,95,275/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,32,95,275/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 117 | 5,000/- | 5,85,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,121 | 500/- | 5,60,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,263 | 50/- | 5,63,150/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,11,597 | 10/- | 11,15,970/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 116 | 1,000/- | 1,16,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,127 | 100/- | 1,12,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,162 | 20/- | 2,23,240/- |
| | | மொத்தம் | 49,21,560/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 55,24,160/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,36,08,400/-**

தொடர் இல. 7181769 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென். மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 6243334-8-28 |
| காலி | 6251652-4-84 |
| கொழும்பு | 6250988-1-57 |
| அனுராதபுரம் | 6251281-7-31 |
| களுத்துறை | 6243891-1-61 |
| கேகாலை | 6246201-9-67 |
| கண்டி | 6251215-3-16 |
| புத்தளம் | 6251618-5-85 |



**ராஜா** யாழ்ப்பாணம்

சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த

**உள்ளம் கேட்குமே**

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

(அ-43380)

**மனோகரா** யாழ்ப்பாணம்

புரட்சிக்கலைஞர் விஜயகாந்த், ரம்பாகிருஸ்ணன், சாக்ஷீ, பிரகாஷ்ராஜ் நடித்த

**வாஞ்சிநாதன்** (சிலதினங்களம் மட்டும்)

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.

அடுத்த வெளியீடு: ஜெயம்ரவி, ரேணுகா மேனன் நடித்த

**தாஸ்**

(அ-44110)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(அ-43363)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீட்டு இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (கடைசி வாரம்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

அடுத்த வெளியீடு **கஜனி**

(அ-41187)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையைக் கண்டித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீதான தாக்குதல்களும் சமீபகாலமாக மீண்டும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் இடம்பெற்ற சுடர்ஒளி பத்திரிகையின் அலுவலகம் மீதான தாக்கு தலை எமது அமைப்பு வன்மையாகக் கண் டிக்கின்றது. இழப்புகளைச் சந்தித்து நிற்கும் சுடர்ஒளி குடும்பத்திற்கு ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்ளும் நாம், ஊடக சுதந்தி ரத்திற்கும் உரிமைகளை பேணவும் உறுது ணையாக நிற்போம் என உறுதியளிக்கின் றோம். குருநாகலில் கைது செய்யப்பட்ட வீரகேசரி செய்தியாளர் ரமேஸ், செய்திசேக ரிக்கச் சென்ற வேளை தாக்கி கைது செய்யப் பட்ட சுடர்ஒளி - உதயன் செய்தியாளர் யதுர் ஷன் ஆகியோர் தொடர்பிலும் எமது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கி றோம்.

அத்துடன் ஊடக சுதந்திரத்தை வலியு றுத்தி அடையாள எதிர்ப்புப் போராட்ட மொன்றை நாளை வியாழக்கிழமை காலை யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக காலை 10.30 மணி முதல் ஒரு மணி நேரத்துக்கு நடத்தவுள்ளோம்.

தமிழ் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர் கள் மீதும் தொடரும் தாக்குதல்கள் நிறுத்தப் படவேண்டும். குற்றவாளிகள் உலகின்முன் அம்பலப்படுத்தப்படவேண்டும்.

கைது செய்யப்பட்ட வீரகேசரி செய்தி யாளர் ரமேஸ் விடுவிக்கப்படவேண்டும் - நிமலராஜன், நடேசன் மற்றும் சிவராம் படு கொலைகள் தொடர்பில் முடக்கி வைக்கப் படுள்ள விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் -

சுடர்ஒளி மீதான தொடரும் பழிவாங்கும் தாக்குதல்கள் தொடர்பாகச் சர்வதேச விசார ணைக்குழு மூலம் விசாரணைகள் முன்னெ டுக்கப்படவேண்டும் என்ற 4 கோரிக்கை களை முன்வைத்து நடத்தப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் ஊழியர்கள் அனை வரையும் பங்கேற்க அழைக்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ஒ)

# கிரனேட் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களிடம் விசாரணைகளை நடத்தியுள்ள னர். சம்பவத்தையடுத்து சந்தேகத்திற்குரிய பல இடங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் சந்தேகநபர்கள் எவ ரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை யென்று கிராண்ட்பாஸ் பொலீஸார் தெரி வித்தனர்.

குண்டுவீச்சு இடம்பெற்ற இடத்திற்கு நேற்றுவந்த கொழும்பு மேலதிக நீதிவான் சுஜீவ நிஸ்ஸங்க விசாரணைகளை நடத்தி னார். அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் களும் நேற்றைய தினம் தமது விசாரணை களை மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் குறித்து பல கோணங்களில் விசாரணை நடத் துமாறு கிராண்ட்பாஸ் பொலீஸாரை அறி வுறுத்தியிருக்கிறார் எனக் கொழும்பு குற்றத் தடுப்பு பணியகத்தின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற 'சுடர் ஒளி'யின் தலைமை அலுவலகத்திற்குப் பொலீஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட் டுள்ளது. (க-3)

# உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள பூதவுடல், இன்று பிற்பகல் 1.00 மணியளவில் மட்டக்குளி, சேர் கல் யாணி கங்கராம மாவத்தையிலுள்ள அவரது வீட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டு அவரது மனைவியான பற்றிமா மரியா செல்வரத் தினத்திடம் கையளிக்கப்படும். உயிரிழந்த டேவிட் செல்வரத்தினத்திற்கு கையுஸ் என்ற 24 வயதான மகன் ஒருவரும் இருக்கிறார்.

# மாற்றுக் கருத்துகளுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். அவரது பேச்சு வெறுப்புணர்ச்சியைக் கிளப்புவதா கவும் தூண்டிவிடுவதாகவும் அமைந்திருந்தது. அதுபோலவே வேறு சில ஊடகங்களையும் பயங்கரவாதிகள் என்றும் ஏகாதிபத்திய அடி வருடிகள் என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

கொழும்பு 'சுடர் ஒளி' பத்திரிகை பணி மனை மீது குண்டெறியப்பட்டு ஒருவர் கொல் லப்பட்டும் மற்றும் சிலர் காயமடைந்தும் இருந்த சம்பவம் தொடர்பாகச் சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகம் செயற்படவும் ஊடக கலா சாரம் முனைப்பாகச் செயற்படவும் பன்மைத்து வமும் சகிப்புத் தன்மையும் அவசியம் - என்று அவ்வியக்கம் தெரிவித்துள்ளது. மேலும் பத் திரிகையாளர்களின் கொலைகள், ஊடகங் கள், ஊடகவியலாளர்கள் மீதான இம்சைகள் போன்றவைகளுக்குக் காரணமாயிருந் துள் ளோரை அரசாங்கம் விரைந்து செயற்பட்டு கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் அர சாங்கத்தால் முடியாதிருப்பதும் அப்படியான வர்கள் அனுபவிக்கும் அச்சமில்லா சூழ் நிலைகளும் ஊடகத்துறையினதும் ஊடக வியலாளரதும் நிலைமைகளை மோசமாக்கி யுள்ளனவென்பது மேற்படி இயக்கத்தின் சார்பில் பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரிய விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ப)

# சுடர் ஒளி மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தினைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.'' - என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு கூடியபோது தமிழ் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல், தமிழ் மக்கள் கைது என்பன தொடர்பாக கவனஈர்ப்பு அறிக்கை ஒன்றைச் சமர்பித்துப் பேசினார் மகேஸ்வரன்

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

'சுடர்ஒளி' பத்திரிகை தலைமை அலு வலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுச் தாக்குதலினால் பாதுகாப்பு உத்தியோ கத்தர் கொல்லப்பட்டுள்ளார்; மேலும் மூவர் காயம் அடைந்துள்ளனர். பெறுமதிமிக்க வாக னங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இது இப்பத்திரிகை மீது மேற்கொள்ளப் பட்ட மூன்றாவது தாக்குதலாகும். வெள்ள வத்தை கிளை அலுவலகத்தின் மீது குண்டு வீசப்பட்டது. முதலாவது சம்பவம். ஜே.வி. பி. ஆர்ப்பாட்டத்தின்போது பத்திரிகையா ளர் தாக்கப்பட்டது 2ஆவது சம்பவம். நேற்று முன்தினம் நடந்தது மூன்றாவது சம்பவ மாகும்.

இவையனைத்தும் சுதந்திர தமிழ் ஊடகம் ஒன்றின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு சதிச் செயல். இந்த மூன்று சம்பவங்கள் தொடர்பாகவும் இதுவரை எவரும் கைதுசெய் யப்படவில்லை. குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப் பொலிஸார் என்ன நடவடிக்கை எடுத் துள்ளனர் என்றும் தெரியவில்லை.

அண்மைக் காலங்களில் ஜே.வி.பியினர் தொடர்ச்சியாக 'சுடர்ஒளி' பத்திரிகையை புலிகளின் பத்திரிகை என முத்திரை குத்தி தவறாகப் பிரசாரப்படுத்தி வருகின்றனர். தமிழ்த் தேசியப் பத்திரிகையான அதன்மீது சேறுபூசி வருகின்றனர்.

ஊடக சுதந்திரம் தொடர்பாகப் பேசும் ஜே. வி.பியினர்தான் அவர்களுடைய ஆர்ப்பாட்டச் செய்திகளை சேகரிக்க சென்ற 'சுடர்ஒளி' செய் தியாளரை காட்டுமிராண்டித்தனமாகத் தாக் கினர். அதேபாணியில் இப்பொழுது 'சுடர் ஒளி' பத்திரிகை நிறுவனம் மீது குண்டுத் தாக் குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தப் பத்திரிகை மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல் கள் தொடர்பாகவும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இச்சம்பவம் தொடர்பாகப் பாது காப்பு அமைச்சரும், பொலிஸ்மா அதிபரும் பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தி சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்துச் சட்டத் தின்முன் நிறுத்தவேண்டும் எனவும் - மகேஸ் வரன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கவனஈர்ப்புப் பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க மகேஸ்வரன் எம்.பி. சபாநாயகரின் அனுமதியைக் கோரியபோது ஜே.வி.பி.பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ஸ அதனை ஆட்சேபித்தார். நாடாளுமன்ற நிலை யியல் கட்டளையின்படி கட்சித் தலைவர் அல்லாத ஒருவர் கவன ஈர்ப்புப் பிரேரணை என்று கூறிக்கொண்டு பேசுவதற்கு இடமளிக் கக் கூடாது என அவர் தெரிவித்தார்.

ஆனாலும், தனது இனம், சமூகம் தொடர் பான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விட யங்கள் குறித்து எந்த ஒரு உறுப்பினரும் சபையின் கவனத்திற்கு கொண்டுவரும் உரிமையைக் கொண்டுள்ளார். அதனை எந்த ஒரு சட்டமும் தடுக்க முடியாது எனத் தெரி வித்த சபாநாயகர், விமல்வீரவன்ஸவின் ஆட் சேபனையை நிராகரித்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து மகேஸ்வரன் எம்.பி. மேற்குறிப்பிட்ட விடயங்களை விலாவாரி யாகச் சபையில் சமர்ப்பித்தார். இந்த விவா தத்தில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.கே.மசிவாஜிலிங்கம், மலையக மக்கள் முன்னணி எம்.பி. இராதாகிருஷ்ணன் ஆகி யோர் ஜே.வி.பி.மீது குற்றஞ்சாட்டி உரை யாற்றினர்.

# இராணுவ உதவிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் காஓ காங்சூனையும் இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராய்ந்துள் ளனர். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீன அமைச்சர், இரு நாடுகள் இடை யேயான புதிய இராணுவ கூட்டு உடன் படிக்கை ஒன்றுக்குத் தமது நாடு தயாராக இருக்கின்றது என்று தெரிவித்தார்.

கடந்த 48 ஆண்டுகளாக சீனா- இலங்கை இடையேயான அரசியல் மற்றும் இராணுவ ரீதியான உறவுகள் தொடர்ந்தும் நல்ல நிலை யில் பேணப்பட்டு வருகின்றன என்றும் -

தாய்வான், திபெத் போன்ற பிரச்சினைகளில் தமது நாட்டை இலங்கை ஆதரப்பதைப் பாராட்டுகிறார் என்றும் -

சீனப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

கடந்த 50 ஆண்டுகளாகச் இலங்கைக்குச் சீனா செய்துவரும் உதவிகளுக்காக அந்த நாட்டுக்கு நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தினை யொட்டி, இலங்கையில் அனல் மின் நிலை யம் ஒன்றை அமைப்பது தொடர்பான ஒப் பந்தத்தில் இரு நாடுகளும் நேற்றுக் கையெ ழுத்திட்டன. சீன அரச நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவரும் இலங்கை மின்சார சபை உயர் அதிகாரி ஒருவரும் இந்த ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டனர்.

# பதுங்கித் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்தே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஊடகங்களுக் குத் தெரிவித்தார்.

பதுங்கியிருந்தவர்கள் முதலில் கிளை மோர் தாக்குதலை நடத்திவிட்டுப் பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் பனிச்சங்கேணி, கஜவத்தை இராணுவ முகாமை நோக்கித் தப்பிச் சென்றனர் என்று சம்ப வத்தை நேரில்கண்ட சிலர் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரையில் இடம்பெற்ற தாக்குதலில் 6 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்; மேலும் ஏழு பேர் காயமடைந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தனர். கருணா குழுவினர் என்று தம்மைக் கூறிக்கொண்ட சிலரும் இவ்வாறு தெரிவித்தனர். (க-3-ரி)

# வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் மேற்படி சம்பவம் குறித்த அறிக்கை யொன்றை நேற்றுச் சமர்ப்பித்தனர். வெளி நாட்டு இறக்குமதியெனக் கருதப்படும் இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டதால் ஒருவர் உயி ரிழந்தார்; இருவர் காயங்களுக்கு உள்ளா கினர். மூன்று வாகனங்களும் சேதமடைந் தன எனப் பொலீஸார் நீதிமன்றத்தில் தெரி வித்தனர்.

சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் இருக் கின்றனர் எனப் பொலீஸார் கூறியதைய டுத்து அவர்களை விசாரணைக்கு உட் படுத்துமாறு நீதிவான் பணிப்புரை விடுத் தார். இந்தச் சம்பவத் தில் உயிரிழந்தவர் தொடர்பான மருத்து வப் பரிசோதனை அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும்படியும் நீதிவான் கொழும்பு சட்ட மருத்துவ அதி காரியைப் பணித் தார். (க-3)

# மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைத் தளபதி கேணல் சொர்ணம் ஏற்றினார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து பயிற்சி பெற்று வெளியேறி யவர்கள் உறுதியுரை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய கேணல் சொர்ணம் கூறியதா வது:

விடுதலைப் புலி களின் வரலாற்றில் மக்களை வைத்து உருவாக்கப்பட்ட விசேட கட்டமைப்பு தமிழரின்தலைநகரில் இன்று முகிழ்கின்றது. இந்தச் செய்தியா னது திருமலையை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரைக் கதிகலங்க வைத்திருக் கும்.

தலைவரின் கட் டளை கிடைக்கும் போது உரியமுறை யில் நேர்த்தியாக, தந் திரமாக அடுத்த கட்ட நகர்வை மேற்கொள் ளக்கூடிய வகையில் படையணிகளை ஒழுங்கமைத்து வைத் துள்ளளோம் - என் றார்.

சிறப்புரைகளை துணை அரசியல் துறைப் பொறுப்பா ளர் எஸ்.செம்மனன், அதிபர் எஸ்.இரத்தின சிங்கம், வாமநேசஸ் வரன், நிலவன் ஆகி யோர் நிகழ்த்தினர்.

திருகோணமலை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப் பாளர் எஸ்.புரட்சி பரிசில்களை வழங் கினர். (ஒ-3)

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் தங்கவேல் ஆச்சாரி (சோதிடர்)



கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்.வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தங்க வேல் ஆச்சாரி நேற்று (30.08.2005) செவ் வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக் கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மக னும் வையாபுரி - காந்திமதி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பாளின் அன்புக் கணவரும் இரமணன், இராகவன், காலஞ் சென்ற கைலைநாதன், கிருஷ்ணமூர்த்தி, வன்னியசிங்கம் ஆகி யோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி, கவிதா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் சபரீசன், மதுஷன், பிரியங்கா, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சுப்பு லெட்சுமி மற்றும் பாலாமணி, ஜெயலெட்சுமி, தங்கராஜீ, குமார வேல், நடராஜா - சண்முகம் ஆகியோரின் சகோதரரும் ராஜாம் பாள், மகேஸ்வரி, பாலகிருஸ்ணன் நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.08.2005) புதன் கிழமை மாலை 4 மணிக்கு (புதிய நேரம்)அவரது இல்லத்திலி ருந்து பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும். (39488)(38-15-45)

இல.44/01 யாழ்.வீதி,
யாழ்ப்பாணம்.
0777917579-8

**தகவல்:**
**மனைவி, மக்கள்.**
**சுவியோ நகைத்தொழிலகம்**

## திருமதி சிவஞானசோதி - ஸ்ரீஸ்கந்தா

உடுவில் கிழக்கு, பெரியமதவடியைச் சேர்ந்த திருமதி சிவ ஞானசோதி ஸ்ரீஸ்கந்தா நேற்று (30.08.2005) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான பண்டிதர் சிவசம்பு - பரஞ்சோதி யின் மகளும் அமரர் வேலாயுதபிள்ளை - தங்கமணியின் அன்பு மருமகளும், திருமகள், அமரர் பாலமுருகன், ஸ்ரீவெங்கடேசன், ஸ்ரீரங்கநாயகி ஆகியோரின் பாசமிகு தயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெரிய மதவடி உடுவிலில் அவரின் இல்லத்தில் நாளை (01.09.2005) வியாழக்கிழமை முற் பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக உடுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமதவடி,
உடுவில் கிழக்கு.

**தகவல்:**
**பிள்ளைகள்.**
(39490)(38-15-45)

## திருமதி கார்த்திகேசு பரமேஸ்வரி

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பரமேஸ்வரி அவர் கள் நேற்று (30.0 8.2005) செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி யளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற திரு. கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் கனகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். வைத்தீஸ் வராக் கல்லூரி), சிவநேசன் (லண்டன்), சிவதாசன் (Accoundan - மாலைதீவு), ரூபதேவியின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (24/1 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்) இருந்து பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று புதன்கிழமை 4 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

24/1, சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (39491)(38-15-45)

**தகவல்:**
**ப. கதிர்காமநாதன்**
**(யாழ். ப.நோ.கூ.சங்கம்).**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org